பக்கங்கள்: 16

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 08 புதன்கிழமை 25.09.2019 கதிர் 324

**இனி து ரகசியம் அல்ல!**

நேற்றிரவு கொழும்பிலிருந்து தெரிந்த ஒரு வாசகர் தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

*“உங்கள் பத்தியில் ரணிலைப் பற்றி பிரஸ்தாபிக்கும் சமயங்களில் அவரை அரசியலில் ‘குள்ளநரித் தந்திரசாலி’ என்று நீங்கள் குறிப் பிடுகின்றமையை*

பக்கம் 02

# பௌத்த மதக் கடும்போக்குத் தீவிரவாத எழுச்சி இன்னொரு இனச் சுத்திகரிப்புக்கு தயாராகிறது!

## மைத்திரிக்கும், ஐ.நாவுக்கும் தமிழர் மரபுரிமைப் பேரவை மனு

முல்லைத்தீவு, செப். 25

சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் அதியுச்ச இனத்துவேசத்தின் இன்னொரு பரிணாமம், மியன்மார் பாணியிலான பௌத்த மத தீவிரவாதம். இது, இலங்கைக்குப் புதியது அல்ல. கடந்த காலங்களில் மென்போக்கு அணுகுமுறையைக் கடைப்பிடித்த பௌத்த தீவிரவாதம் தற்போது கடும்போக்கு அணுகு முறையைக் கையிலெடுத்திருப்பது என்பது இலங்கையின் பெரும்பான்மை ஜனநாயக விழுமியங்களை முற்று முழுதாகவே இல்லாதொழிக்கின்றது. 2009ற்குப் பின்னரான பௌத்த மதக் கடும்போக்குத் தீவிரவாத எழுச்சி இன்னொரு இன சுத்திகரிப்புக்கான ஆயத்தங்களை முன்னெடுக்கின்றது.

- இவ்வாறு தமிழர் மரபுரிமைப் பேரவையினால் நேற்று ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும், ஐ.நா. வதிவிடப் பிரதிநிதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 03

# சஜித்தான் வேட்பாளர்

## 2024 வரை கட்சித் தலைவர் ரணில் நேற்று மாலை இணக்கம் ஏற்பட்டது



கொழும்பு, செப்ரெம்பர் 25

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நிறுத்துவதற்கு அக்கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் கூடித் தீர்மானித்திருக்கின்றார்கள் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் தலைவராக 2024 வரைத் தாமே நீடிப்பார் என்ற நிபந்தனையுடனேயே இந்த ஏற்பாட்டுக்கு ரணில் விக்கிரமசிங்க இணங்கினார் என்றும் கூறப் படுகின்றது.

பக்கம் 02

# காவிகளின் அடாவடிக்கு எதிராக அலையென திரண்டனர் மக்கள்!

## முல்லைத்தீவில் நேற்றுப் போராட்டம்






முல்லைத்தீவு, செப். 25

நீதிமன்றத் தீர்ப்பை அவமதித்து, இந்து ஆலயத்தின் புனிதத்தைக் கெடுக்கும் வகையில் தீர்த்தக் கேணியில் சடலத்தை எரித்த பௌத்த பேரினவாதத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, முல்லைத்தீவில் நேற்றுப் பெரும் கண்டனப் போராட்டம் இடம்பெற்றது.

பக்கம் 03

# வெள்ளத்தில் தென் மாகாணம்!

## வீடுகளுக்குள் நீர் புகுந்ததால் மக்கள் பாதிப்பு



கொழும்பு, செப். 25

தென் மாகாணத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாகப் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என இடர் முகாமைத்துவ

பக்கம் 03

# வந்து என்னுடன் கைகோருங்கள்!

## திஸ்ஸவுக்கு சஜித் அழைப்பு

கொழும்பு, செப். 25

நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் தன்னுடன் இணையுமாறு ஐக்கிய தேசியக்

பக்கம் 03

# முல்லை பொலிஸ் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை வேண்டும்

## பொலிஸ் ஆணைக்குழுவிடம் சட்டத்தரணிகள் வலியுறுத்து

கொழும்பு, செப். 25

முல்லைத்தீவு நீதிமன்றின் கட்டளையை நடைமுறைப்படுத்தத் தவறிய முல்

பக்கம் 02

# வடக்கு மாகாணச் சட்டத்தரணிகளின் பகிஷ்கரிப்பு வெள்ளிவரை தொடரும்



யாழ்ப்பாணம், செப். 25

வடக்கு மாகாண சட்டத்தரணிகளின்சேவைப் புறக்கணிப்பு நாளை மறுதினம் வெள் ளிக் கிழமை வரை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதி மன்றின் கட்டளையை அவ

பக்கம் 03

# அடைமழையினால் பாதிப்புற்ற மக்களுக்கு உடனடி நிவாரணம்

## ஜனாதிபதி மைத்திரி பணிப்புரை

கொழும்பு, செப். 25

கடும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துரித நிவாரணம்

பக்கம் 03

# தனிமையில் வசித்துவந்த மூதாட்டி சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், செப். 25

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் தனிமையில் வசித்த மூதாட்டி நேற்று முன்தினம்

பக்கம் 03

# சஜித்தையே களமிறக்குவேன் என ரணில் எனக்கு அறிவித்துவிட்டார்

## விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக சஜித் பிரேமதாஸவைக் களமிறக்கவுள்ளார் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எனக்கு அறிவித்துவிட்டார்.

–இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியில் பங்காளிக் கட்சியாக அங்கம் வகிக்கும் நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையிலுள்ள அதிகாரங்களை மேலும் குறைத்து நாடாளுமன்ற ஆட்சி முறைமையைப் பலப்படுத்துவதற்கு சஜித் பிரேமதாஸ இணக்கம் வெளியிட்டுள்ளார்.

இதனையடுத்தே ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அவரை களமிறக்குவதற்கு கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானம் எடுத்துள்ளார். இது தொடர்பில் எனக்கு நேற்றே அறிவிக்கப்பட்டது – என்றார். (ஐ)

# சீரற்ற காலநிலையால் 45 ஆயிரம் பேர் பாதிப்பு!

காலி, மாத்தறை, களுத்துறை உட்பட நாட்டில் 5 இற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் பெய்துவரும் அடை மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவால் 11 ஆயிரத்து 387 குடும்பங்களைச் சேர்ந்த 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், ஒருவர் பலியாகியுள்ளமையுடன் 6 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அந்த நிலையத்தால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் 282 வீடுகள் பகுதியளவும் , 11 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. இடம்பெயர்ந்துள்ள 3 ஆயிரத்து 488 பேர் 16 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

காலி மாவட்டத்தில் 11 ஆயிரத்து 510 பேரும், மாத்தறை மாவட்டத்தில் 14 ஆயிரம் பேரும், கம்பஹா மாவட்டத்தில் 28 ஆயிரத்து 321 பேரும், கொழும்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 685 பேரும் , களுத்துறையில் 159 பேரும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். மலையகத்திலும் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கும், மண்சரிவும் ஏற்பட்டுள்ளன.

அதேவேளை, தென்மேல் பருவப்பெயர்ச்சி மழை பெய்யக்கூடும் என வளிமண்டளவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

காலி, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக கட்டுநாயக்க பகுதியில் 219 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நில்வள கங்கை, ஜின் கங்கை, களுகங்கை ஆகியவற்றின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

**அவசர தொலைபேசி இலக்கங்கள்**

சீரற்ற காலநிலையினால் ஏற்படக்கூடிய அனர்த்த நிலை தொடர்பில் அறிவிப்பதற்கு பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கங்கள் இரண்டை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த தொலைபேசி இலக்கங்கள் பின்வருமாறு:

011 2587229
011 2454526

விபத்துக்கள் தொடர்பில் பொது மக்களுக்கு இந்த தொலைபேசி இலக்கங்கள் ஊடாக அறிவிக்க முயும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# டில்ருக்ஷி சேவை இடைநிறுத்தம்



கொழும்பு, செப். 25

சொலிசிட்டர் ஜெனரல் டில்ருக்ஷி டயஸ் விக்கிரமசிங்க சேவையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

பொதுச்சேவைகள் ஆணைக்குழு இதற்கான அறிவுறுத்தலைச் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு வழங்கியுள்ளது.

அவன்ட்கார்ட் நிறுவனத் தலைவருடன் டில்ருக்ஷி மேற்கொண்ட தொலைபேசி உரையாடல் சர்ச்சையை ஏற்படுத்திய பின்னணியில் இந்தப் பதவி இடைநிறுத்தம் நடந்துள்ளது. (ஐ)

## சஜித்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவா, அமைச்சர் சஜித் பிரேமதாஸாவா என்ற விவகாரம் நீண்ட இழுபறியாக நீடித்த பின்னணியில் நேற்று இணக்கம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

நேற்று அலரிமாளிகையில் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இதற்கான உடன்பாடு எட்டப்பட்டதாகத் தெரிகின்றது.

2018 இல் நடைபெற்ற கட்சியின் தேசிய மாநாட்டில் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கான கட்சித் தலைவராக ரணில் விக்கிரமசிங்க தேர்வு செய்யப்பட்டார்.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு சஜித் பிரேமதாஸா வென்று ஜனாதிபதியானாலும் 2024 வரை ரணில் விக்கிரமசிங்கவே கட்சித் தலைவராக நீடிப்பார் என்ற உறுதிப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த வேட்பாளர் நியமனத்தை சஜித்துக்கு விட்டுக்கொடுக்க ரணில் இணங்கினார் என்று கூறப்படுகின்றது.

எது, எப்படியென்றாலும் கட்சியின் செயற்குழு நாளை கூடும் போதே வேட்பாளர் யார் என்பது இறுதியாக உறுதிப்படுத்தப்படும் எனக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*அடிக்கடி கவனித்து வருகிறேன் சரியாகத்தான் கூறியிருக்கின்றீர்கள்...!"* – என்று திடீரென அவர் குறிப்பிட்டார்.

எனக்கு மலைப்பாக இருந்தது. கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்கான போட்டியில் மூத்த தலைவரான ரணில், மிக இளையவரான சஜித்திடம் தோற்று, விட்டுக்கொடுத்து, விலக வேண்டிய இக்கட்டில் சிக்கி இருக்கின்றார். இந்தச் சமயத்தில் அவரை அரசியலில் நரித் தந்திரசாலி என்பதா என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன். ஆனால் அந்த மூத்த வாசகரின் மிகுதி உரையாடலைக் கேட்டதும் அது சரிதான் என்று எனக்கும் தோன்றியது.

*"1994 இலிருந்து ஐ.தே.கட்சியின் தலைவராக ரணில் இருந்து வருகின்றார். அந்தப் பதவியில் இருந்து யாராலும் அவரை அசைக்க முடியவில்லை. இந்த 25 வருட காலத்தில் – கால் நூற்றாண்டு காலத்தில் – ஐ.தே.கட்சி பல தேர்தல்களில் படுதோல்வியைச் சந்தித்து விட்டது. தேசிய ரீதியில் பிரதான கட்சியான ஐ.தே.கவுக்கு கடந்த கால் நூற்றாண்டாக ஜனாதிபதிப் பதவி எட்டாத கனிதான். ஆனாலும் இத்தோல்விகளுக்குப் பின்னரும் கட்சித் தலைவர் பதவியில் இருந்து ரணிலை நீக்கமுடியவில்லை.*

*"இந்த முறை கோட்டா அலை வேறு தெற்கில் வீசுவதாகக் கூறுகின்றார்கள். இந்த அலைக்குள் ரணில் சிக்கினால் மீண்டும் தோல்வியடைவார். இம்முறை தோற்றால் கட்சித் தலைவர் பதவியும் அவருக்கு கோவிந்தாதான். அவர் அரசியலைத் துறந்து அஞ்ஞாதவாசம் செல்ல வேண்டியதுதான்.*

*"இப்பிரச்சினையை எப்படிச் சமாளிக்கப் போகின்றார், கட்சித் தலைவர் பதவியையும் துறந்து அவர் வீட்டுக்குப் போவாரா என்று என் மனதில் பல கேள்விகள்.*

*"முதலில் வேட்பாளர் தெரிவில் சஜித்துக்கு அந்த இடத்தைக் கொடுக்க மாட்டேன் என்று பிகு பண்ணினார் ரணில். தாமே போட்டியிடப் போகின்றார் என்று கூறிக் குழப்பியடித்தார்.*

*"வேட்பாளர் பதவி தனக்கு வேண்டும் என்று அடாவடித்தனத்துடன் பிடிவாதம் பண்ணிய சஜித் பிரேமதாஸா, இறுதியில் அதனைப் பெறுவதற்காக பிரதமர் ரணிலுக்கு சில உறுதிமொழிகளைக் கொடுக்க வேண்டியவரானார்.*

*"அதாவது சஜித் வேட்பாளராகக் களிறங்குவதாயின் அவர் சில விடயங்களுக்குக் கட்டுப்பட வேண்டும் என்று நிபந்தனை விதித்தார் பிரதமர் ரணில்.*

*"நாளைக்கு ஜனாதிபதித் தேர்தலில் சஜித் வென்று ஜனாதிபதியானால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அடியோடு நீக்குவதற்கான இணக்கத்தை அவர் வெளிப்படுத்த வேண்டும்.*

*"2018 இல் நடைபெற்ற ஐ.தே. கட்சியின் தேசிய மாநாட்டில் எடுத்த தீர்மானத்துக்கு அமைய 2024 வரை நான் கட்சித் தலைவராக நீடிக்க வேண்டும் – என்று ரணில் தரப்பு விதித்த நிபந்தனைகளுக்கு இணங்கினார் சஜித்.*

*"இதில்தான் சூட்சுமம் அடங்கியுள்ளது. எப்படியும் அடிக்கும் கோட்டா அலையில் நான் மட்டுமல்ல, யார் நின்றாலும் தோற்றுவிடுவார்கள், அப்படி நின்று தோற்றுப் போய் அரசியலில் இருந்து நிரந்தரமாக ஒதுங்குவதைவிடுத்து, அந்தப் பொறுப்பையும், தோல்வியையும் ஏன் சஜித் தலைமையில் சுமத்தி விடக் கூடாது எனத் திட்டம் போட்டார் ரணில்.*

*"அதன்படி ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குகிறார் சஜித்.*

*"அவர் வென்றாலும், தோற்றாலும் கட்சியின் தலைமைப் பதவி 2024 வரை ரணில் வசம்தான் என்பது உறுதி.*

*"பல தோல்விகள், பின்னடைவுகளுக்கு மத்தியில் கால் நூற்றாண்டாகக் கட்சித்தலைமைப் பதவியை போட்டியிட்டியின்றி தக்க வைத்திருக்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அதை உறுதிப்படுத்தி விட்டார்.*

*"இந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் வென்றாலும் தோற்றாலும் ரணிலின் பிரதமர் பதவி தொடர்வதில் ஆபத்து இருக்காது. ஆகவே, அவரை அரசியலில் 'நரித்தந்திர சாலி' என்பது சரிதானே...!"* – என்றார் அந்த வாசகர்.

அவர் சொல்வது சரிதானே. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் வாசகர்களே...?

★ ★ ★

பிரதமர் ரணில் – அமைச்சர் சஜித் – சபாநாயகர் கரு மூவரும் நேற்று முன்தினம் இரவு சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தனர். சுமார் இரண்டு மணிநேரம் அது நீடித்தது.

*"ரணிலும், சஜித்தும் மிகவும் மனம் திறந்து தங்களுக்குள் பேசிக்கொண்டனர். எந்தச் சந்தர்ப்பத்திலும் இருவரும் பிரிந்து நிற்பதில்லை என அவர்கள் தங்களுக்குள் உறுதிபூண்டுள்ளனர். வேட்பாளர் தொடர்பில் என்ன முடிவு எடுத்தாலும் சேர்ந்தே அந்தத் தீர்மானத்தை எடுப்பது என அவர்கள் பிரதிக்ஞை செய்துள்ளனர்."* – என்று தமக்கு மிக நெருங்கிய ஒருவரிடம் நேற்றுமுன்தினம் இரவு நடந்த சந்திப்புக் குறித்து சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்றுத் தகவல் தெரிவித்தார் என மிகமிக நம்பகமாக அறியவந்தது.

*"சஜித் இன்னும் அரசியலில் முதிர்ச்சி அடையவில்லை என்று ரணில் கவலைப்படுகின்றார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை, தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு போன்ற விடயங்களில் தீர்க்கதரிசனமான பார்வை சஜித்திடம் இல்லை. அத்தகைய நிலையில் அவருக்கு வேட்பாளர் நியமனத்தை வழங்குவது கட்சிக்கும் நல்லதல்ல, நாட்டுக்கும் நல்லதல்ல என்பதே ரணிலின் நிலைப்பாடு.*

*"சஜித்துக்கு வேட்பாளர் நியமனத்தை வழங்குவதாயின் இத்தகைய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் சஜித் மீது சரியான கட்டொழுங்கு அல்லது கட்டுப்பாடு இருக்கின்றமையை உறுதிப்படுத்திக்கொண்டு தான் அந்த நியமனத்தை ரணில் வழங்குவார்"* – என்று நேற்றுக் காலை சபாநாயகர் கரு தமக்கு நெருக்கமான ஓர் அரசியல் பிரமுகருக்குத் தெரிவித்தார்.

அந்த அடிப்படையிலேயே நேற்று மாலை விடயங்கள் முடிவுக்கு வந்திருக்கின்றன போலும்.

இதற்கிடையில் –

நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார் என்றும் அறியவந்தது.

அச்சமயம், சம்பந்தரும் இதே விவகாரத்தை பிரதமர் ரணிலிடம் உறுதிப்படுத்தினாராம்.

*"என்ன முடிவாயினும் நீங்களும் சஜித்தும் சேர்ந்தே எடுக்க வேண்டும். பிரிந்து நிற்க எண்ணவே கூடாது."* – என்று மூத்த – பழுத்த – அரசியல்வாதியான சம்பந்தன் கூறியபோது, நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் பிரிந்து நிற்கமாட்டோம் என்ற உறுதிமொழியை ரணில் விக்கிரமசிங்க சம்பந்தனுக்கு வழங்கினார் என்றும் மிகமிக நம்பகமாக அறியவந்தது.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பது உண்மைதானே...!

**- மின்னல் -**

## முல்லை பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லைத்தீவு தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் வடக்கு மாகாண சட்டத்தரணிகள் வலியுறுத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு – பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை ஆக்கிரமித்து விகாரை அமைத்த, பௌத்த பிக்குவின் சடலம், நீதிமன்ற உத்தரவுகளை மீறி, ஆலய வளாகப் பகுதியில் தகனம் செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளையை அவமதித்தவர்களைக் கண்டித்தும் அவர்களுக்குத் துணை நின்ற பொலிஸாரின் செயலைக் கண்டித்தும் வடக்கு மாகாண சட்டத்தரணிகள் நேற்று செவ்வாய்கிழமை வடக்கு மாகாணம் முழுவதும் நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்தனர்.

முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் திரண்ட சட்டத்தரணிகள், வாயில் கறுப்புத் துணி கட்டி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் வடக்கு மாகாண சட்டத்தரணிகள் கூடி அடுத்து முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

இதன்போது ஞானசார தேரர் மற்றும் அவரது தரப்புகள் நீதிமன்ற அவமதிக்கும் செயலில் ஈடுபட்டமைக்கும் கருத்துக்களை வெளியிட்டமைக்கும் எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை சட்டமா அதிபர் தாக்கல் செய்யவேண்டும். அது தொடர்பான உறுதிமொழியை சட்ட மா அதிபர் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் எழுத்து மூலம் வழங்கவேண்டும் என்றும் அதுவரை தமது சேவைப் புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் என்றும் சட்டத்தரணிகள் தீர்மானித்தனர்.

அத்துடன், முல்லைத்தீவு நீதிமன்றம் ஆக்கிய கட்டளையை மதிக்காது தாம் முன்னரே திட்டமிட்ட நீராவியடிப் பிள்ளையார் ஆலய தீர்த்தக் கேணி அருகே பௌத்த பிக்குவின் உடலைத் தகனம் செய்த பிக்குகளுக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கைத் தொடர்ந்து முன்னெடுப்பது என்றும் சட்டத்தரணிகள் தீர்மானம் எடுத்தனர்.

மேலும் முல்லைத்தீவு நீதிமன்றில் கட்டளையை நடைமுறைப்படுத்தத் தவறிய முல்லைத்தீவு தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் வலியுறுத்துவது என்றும் இந்தக் கூட்டத்தின் போது வடக்கு மாகாண சட்டத்தரணிகள் தீர்மானம் எடுத்தனர். (ஐ)

காலைக்கதிர்
Kalaikathir



## பௌத்த மதக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மகஜரின் முழு விவரம் வருமாறு –

நீராவியடிப் பிள்ளையார் வளாகத்தில் அத்துமீறிகுடியிருந்த பௌத்த பிக்குவின் உடலை கடந்த 23.09.2019 அன்று பொதுபல சேனா ஞானசாரா தேரர் தலைமையில் நீதிமன்ற தடையுத்தரவையும் மீறி தகனம் செய்தசெயலானது சிறீலங்காவின் முழு நீதித்துறைக் கட்டமைப்பை அவ மதித்ததோடு ஏற்கனவே நீதித்துறைமீதிருந்தநம்பிக்கையின்மையை மீண்டும் ஆழமாக உறுதிப்படுத்தியுள்ளது. ஏற்கனவே நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த பௌத்த பிக்கு சிறிலங்கா ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பின் அடிப்படையில்விடுதலைசெய்யப்பட்டிருந்தார்.

மேற்குறிப்பிட்ட பௌத்த பிக்குவின் செயற்பாடும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின் பௌத்த பிக்குகளின் செயற்பாடுகளும் வெறுமனே உதிரியான செயற்பாடுகளாக உற்று நோக்க முடியாதவை. இச் செயற்பாடுகள் ஏற்கனவே நன்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்பாடே.

சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் அதியுச்ச இனத்துவசத்தின் இன்னொரு பரிணாமம், மியன்மார் பாணியிலான பெத்த மத தீவிரவாதம் சிறிலங்காவுக்கு புதியது அல்ல. கடந்த காலங்களில் மென்போக்கு அணுகுமுறையைக் கடைப்பிடித்த பௌத்த தீவிரவாதம்தற்போதுகடும்போக்கு அணுகுமுறையைக்கையிலெடுத்திருப்பது என்பது சிறிலங்காவின் பெரும்பான்மை ஜனநாயக விழுமியங்களை முற்று முழுதாகவே இல்லாதொழிக்கின்றது. சிறிலங்காவின் பெரும்பான்மை ஜனநாயகப் போர்வையோடு சிங்கள பௌத்த கடும்போக்கு தேசிய தீவிரவாதம் கட்டவிழ்க்கப்பட்டிருந்தோடு சிறிலங்கா சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமானது என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றது. தமிழ்த் தேசியத்தின் எழுதல் என்பது வரலாற்றில் சிங்கள பௌத்த கடும்போக்கு தேசியதீவிரவாதத்துக்குஎதிரானது என்பதையும் வரலாறு எமக்குச் சுட்டி நிற்கின்றது.

பெரும்பான்மை ஜனநாயகப் போர்வையில் 2009 ற்குப் பின்னரான சிங்கள பௌத்த கடும்போக்கு தேசிய தீவிரவாதத்தின் இன்னொரு பரிணாமத்தின் அதியுச்ச எழுச்சி வெவ்வேறு தளங்களில் வெவ்வேறு அணுகுமுறைகளோடு குறிப்பாக அரச கட்டமைப்புக்களுக்கூடாக தமிழர் தாயகத்தில்வெளிப்படுத்தப்படுவது சிங்களபௌத்ததேசியதீவிரவாதத்தினை ஆழப்படுத்துவதோடு சிங்கள பௌத்தம் தவிர்ந்த ஏனையவர்களுக்கான சனநாயக வெளியை சுருக்கி வருகின்றது.

2009ற்குப் பின்னரான பௌத்த மத கடும்போக்கு தீவிரவாத எழுச்சி இன்னொரு இன சுத்திகரிப்பிற்கான ஆயத்தங்களை முன்னெடுக்கின்றது. பௌத்த மதத்திற்கும், பௌத்த மதத் தலைவர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அதிவிசேடத் தன்மையும் அதன் வெளிப்பாடுகளின் வெவ்வேறு பரிணாமங்களும் இன்னொரு இனச் சுத்திகரிப்பை கட்டியம் கூறுகின்றன. ஜனநாயக செயற்பாட்டு வாதிகளாக தம்மை அடையாளம் காட்டும் அமைப்புக்களும், ஆர்வலர்களும் இச்செயலைக்கவனத்தில்எடுக்காமலிருப்பதும் அவர்களுடைய இரட்டை வேடத்தனத்தை வெளிக் காட்டுவதற்கான சந்தர்ப்பங்களாகஎண்ணத்தோன்றுகின்றது.

நீதிமன்றத்தின் கட்டளையை அமுல்படுத்த முடியாத சிறிலங்கா அரசின்படைக்கட்டுமானம்காவல்துறை உட்பட ஓர் இனம், தம் சார்ந்து செயற்பட முடிவதானது வெறுமனே ஒரு சந்தர்ப்பம் சார்ந்து எடுக்கப்பட்ட முடிவல்ல. நீதிமன்ற தடையுத்தரவை மீறிய செயற்பாடுகளின் சந்தர்ப்பங்கள் சிங்கள பௌத்த இன மதம் சார்ந்து அதிகரித்துச் செல்லுவது 2009 இற்குப் பின்னரான புதிய செல் நெறியாகும்.

அவ்வாறானசெயற்பாடுகளுக்கு சிங்கள அரசின் பொறிமுறைகள் முண்டு கொடுப்பது இனச்சுத்திகரிப்பு உள்நோக்க திட்டமிடலை வெளிக்கொணருகின்றது.

2009 மே க்குப் பின்னரான சூழலில் தமிழர்களின் பொறுப்புக்கூறல் தொடர்பில் உள்நாட்டு பொறிமுறையை நிராகரித்து வெளிநாட்டு விசாரணையை முன்வைத்ததற்கான காரணங்களை தமிழர் கூட்டுரிமை சார்ந்து செயற்படுகின்ற அமைப்புக்களும், குழுக்களும் முன் வைத்தது தெரிந்ததே.

சிறிலங்கா நீதித்துறைக் கட்டமைப்பின் நம்பகத்தன்மை பொறுப்புக்கூறல் தொடர்பில் இன்றும் குறிப்பாக போர்க்குற்றம், மனித குலத்திற்கு எதிரான குற்றம், இனப்படுகொலை தொடர்பில் இதய சுத்தியோடு பக்கச் சார்பற்றும் செயற்படாதது என்பதை மீண்டும் இச்சம்பவம் நிரூபித்துள்ளது. கொலைக் குற்றவாளிகளை உயர் பதவிகளுக்கு உயர்த்துவதனூடு சிறிலங்கா அரசு தண்டனை விலக்கீட்டை ஊக்குவிக்கின்றது. சர்வதேச அழுத்தங்களையும் தவிர்த்து மிக அண்மையில் நடைபெற்ற இராணுவத் தளபதியின் நியமனமானது சிறிலங்கா அரசு என்னவேண்டுமென்றாலும்செய்யலாம்என்கின்றதற்துணிவைபெரும்பான்மை சிங்கள தேசியவாதிகளுக்கு வழங்கியுள்ளது. இத் தற்துணிவின்பல்வேறுவடிவங்கள் வரலாற்றில் தமிழர் தற்துணிவின் பல்வேறு வடிவங்கள் வரலாற்றில் தமிழர் மீது கட்டவிழ்க்கப்பட்ட படுகொலைகளாகஉருவெடுத்தன.

தமிழர்களின் வெளி சர்வதேச விசாரணை பொறிமுறைக்கோரிக்கையை நிராகரித்து கலப்புமுறை பொறிமுறையை பரிந்துரைத்த அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் இனியாவது சிறிலங்காவின் சிங்கள பௌத்த தேசியத்தின் பிரத்தியேகவாத அரசியலை விளங்கிக்கொள்ளுதல்வேண்டும். சிறிலங்கா அரசின் நீதித்துறைக் கட்டுமானம் சிங்கள பௌத்த தேசிய பிரத்தியேகவாத கருத்தியலைதக்கவைக்கின்றஇன்னொரு சிங்கள அரசின் பொறிமுறை.

அன்பான எம் நெஞ்சிற்கினிய ஈழத்தமிழ் உறவுகளே,

ஓர் அடக்குமுறைக்கு எதிராக எழுந்த இனம் எம் தமிழினம். சிங்கள பௌத்த சிறிலங்கா அரசு மீண்டும் மீண்டும் தமிழர்களை வெவ்வேறு பொறிமுறைகளோடு அடக்க முனைகின்றது என்பதை கடந்த ஒரு தசாப்தம் எமக்கு மிகத் தெளிவாக சுட்டி நிற்கின்றது. தமிழினத்தின் கூட்டு இருப்பையும், உரிமையும் மக்கள் சக்தியில் நம்பிக்கை வைத்து போராட்ட வடிவங்களை மாற்றி வன்முறையற்ற வழியில் எம் அரசியல் கோரிக்கைகளை முன்வைப்பதற்கான காலம் கனிந்து வருகின்றது. இவ்வரலாற்றுக் கடமையிலிருந்து நாம் தமிழர்களாக விலகி நிற்க முடியாது. எமக்கான தீர்வு கிடைக்கும் வரை எமது அடுத்த சந்ததிக்கான இருப்பை உறுதி செய்யும் வரை, நாம் தொடர்ந்து உழைக்க வேண்டியுள்ளது. இவ் உழைப்பு கூட்டான முயற்சியாக உருவெடுக்க வேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம். தொடர்ந்து கூட்டாக உழைப்போம் – என்றுள்ளது. (ஐ)

## காவிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்மரபுரிமைபேரவையின் அழைப்பின் பேரில் நேற்றுக் காலை 11 மணிக்கு இந்தக் கண்டனம் போராட்டம் நடந்தது.

நீதிமன்றின் தீர்ப்பை அவமதித்து, பொலிஸாரின் பூரண ஆதரவோடு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய தீர்த்தக்கேணியில் பௌத்த பிக்குவின் சடலத்தை எரித்தமையை கண்டித்தும் , பொலிஸாரின் நடவடிக்கைக்கு எதிராகவும் சட்டத்தரணிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையைக் கண்டித்தும் இந்த மாபெரும் கண்டனப் போராட்டம் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் முன்பாக ஆரம்பித்து நீதிமன்ற வீதியூடாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வரை சென்றடைந்தது.

போராட்டத்தில்கலந்துகொண்ட மக்கள் ‘கைது செய்! கைது செய்! ஞானசார தேரரை கைது செய்!’, ‘இலங்கைப் பொலிஸாரே தமிழ் மக்களுக்கு ஒரு சட்டமா?’, ‘ஒழிக! ஒழிக! பௌத்த அராஜகம் ஒழிக!’, ‘வேண்டும், வேண்டும் நீதி வேண்டும்!’, ‘பௌத்தருக்கு ஒரு சட்டம்; தமிழருக்கு ஒரு சட்டமா?’ – என்ற கோஷங்களை எழுப்பியவாறும், பதாதைகளை தங்கியவாறும் மாவட்டச் செயலக வாயில் வரை சென்றனர் .

இறுதியில் தமிழர் மரபுரிமை பேரவையினர் மதத்தலைவர்கள் இணைந்து ஜனாதிபதிக்கும், ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதிக்கும் கையளிப்பதற்கான மகஜரை முல்லைத்தீவு மாவட்டச் செயலக நிர்வாக உத்தியோகஸ்தரிடம் கையளித்தனர்.

இந்தக் கண்டனப் போராட்டத்தில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிறேமசந்திரன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், சர்வமதத் தலைவர்கள், சிவில் அமைப்புகள், வர்த்தகர்கள் உள்ளிட்ட 2000 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தில்கலந்துகொண்ட மக்களும் இளைஞர்களும் மாவட்ட செயலகம் முன்பாக, ஞானசார தேரரின் புகைப்படத்துக்கு செருப்பால் அடித்துத் தீயிட்டுக் கொளுத்தி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக முல்லைத்தீவு வணிகர்கள் தமது கடைகளை அடைத்துப் பூரண ஆதரவை வெளியிட்டிருந்தனர் . (ஐ)

## வெள்ளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியநிலையம்தெரிவித்துள்ளது.

காலியின் சில பகுதியில் வீடுகளுக்குள்வெள்ளம்புகுந்துள்ளது. அத்தோடு வெள்ளம் காரணமாக வீட்டிலிருந்து வெளியேற முடியாமல் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

மஹ ஹபுகல பொல்துவ பகுதியில் 76 குடும்பங்களும், பின்னகொல துவ பகுதியில் 28 குடும்பங்களும் இவ்வாறு சிக்கியுள்ளன. அவர்களை காப்பாற்றும் முயற்சியில் மீட்புக் குழுவினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஹோலுவாகொட தேவகிரி விகாரை மாவத்தை நீரில் மூழ்கியுள்ளமையினால் அங்கும் அதிகளவில் மக்கள் சிக்கியுள்ளனர். சில வீதிகளில் 6 அடிக்கு மேல் நீர் நிறைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

## அடைமழையினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்கானநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தநிவாரணப்பணிகளுக்காக முப்படையினரின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளுமாறும் மண்சரிவு அபாயம் காணப்படும் பிரதேசங்களிலிருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகளை முப்படையினரின் ஒத்துழைப்புடன்துரிதமாகமேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் செயற்பாடுகளுக்கு நிதியை தடையாகக் கொள்ள வேண்டாமெனத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி, தேவையான நிதியை நிதி அமைச்சிடம் கோரும்படியும் தான் தலையிட்டு அந்த நிதியைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம் தொடர்பில் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்ட அறிவுரைகளை வழங்கினார்.

இன்னும் இரண்டு மாத காலம் வரை அதிக மழையுடன் கூடிய காலநிலை ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் முன் ஆயத்தங்களுடன் அந்தச் சூழ்நிலைகளுக்கு முகங்கொடுப்பதற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் துறைகள் ஒருங்கிணைந்து திட்டமிட்டு செயற்படுவதன் அவசியத்தையும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

அத்தோடு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் காலத்தின்போதும் தடையின்றி அவசர அனர்த்த நிலைமைகளைச்சமாளிப்பதோடு மக்களுக்கான நிவாரணச் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்வதன் அவசியத்தை ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

இதன்போது கடந்த சில தினங்களாக ஏற்பட்ட கடும் மழையினால் காலி, மாத்தறை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் 6,000 இற்கும் மேற்பட்டோர் இடருக்கு முகங்கொடுத்திருப்பது தெரிய வந்துள்ளதுடன், அவர்களுக்காக முன்னெடுக்கப்படும் நிவாரண வேலைத்திட்டங்கள் பற்றி மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

இடர் முகாமைத்துவ அமைச்சு கடந்த காலங்களில் நிலவிய வரட்சி காரணமாக சுமார் 15 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு குடிதன்னீர் விநியோகத்திற்கான செயற்பாடுகளை முன்னெடுத்ததாகவும் அதனைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தது.

இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார, ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனெவிரத்ன, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் சாந்த கோட்டேகொட, இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி, முப்படைத் தளபதிகள், பதில் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்டோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ஐ)

## வந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்குப் பகிரங்க அழைப்பை விடுத்துள்ளார் அமைச்சர் சஜித் பிரேமதாஸ.

கஷ்டமான காலத்தில் கட்சிப் பணியாற்றிய திஸ்ஸ அத்தநாயக்கவைப் போன்று – கருத்து வேறுபாடுகளால் விலகிச் சென்ற பலரும் தம்முடன் இணைய முன்வரவேண்டுமென அமைச்சர் சஜித் விசேட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். (ஐ)

## தனிமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குருநகர் பாங்சால் வீதியைச் சேர்ந்த ஜோசப்மேரி ஜோசப்பினா (வயது 61) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இரண்டு பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்து வந்த நிலையில் மூதாட்டி தனிமையில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு மழை பெய்துகொண்டிருந்த பொழுது மூதாட்டியை பார்க்கச் சென்ற உறவினர்கள் அவர் மூச்சடங்கிக் காணப்பட்டதையடுத்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றிருந்தனர்.

எனினும் மூதாட்டி இறந்துவிட்டார் என மருத்துவ அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

இறப்புத்தொடர்பில்திடீர் இறப்பு விசாரணை அலுவலர் நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதித்து ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த நீராவியடிப் பிள்ளையார் ஆலயச் சூழலில் பௌத்த பிக்குவின் உடலை தகனம் செய்த ஞானசார தேரர், அவர் சார்ந்த தரப்புகளுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனச் சட்டமா அதிபர் எழுத்துமூல உறுதிவழங்க வேண்டும் என்றும் சட்டத்தரணிகள் கோரியுள்ளனர்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு அல்லது அதற்கு முன்னர் சட்டமா அதிபர் எழுத்துமூல உறுதிமொழியை வழங்காவிடின் சேவைப் புறக்கணிப்பைத் தொடர்வது குறித்து மீள்பரிசீலனை செய்யப்படும் என்றும் வடக்கு மாகாணச் சட்டத்தரணிகள் அறிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண சட்டத்தரணிகளால் முல்லைத்தீவு நீதிமன்றுக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்கு இடம்பெற்றவேளை நீதிமன்ற வளாகத்துக்கு வெளியில் வைத்து ஞானசார தேரர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டுள்ளார்.

பௌத்த பிக்குவின் உடலைத் தகனம் செய்யும் இடம் தொடர்பில் பௌத்த சங்கம் கூடித் தீர்மானம் எடுத்துவிட்டோம். நீதிமன்றம் வழங்கும் கட்டளையைவிட பௌத்த சங்கம் எடுத்த தீர்மானமே எமக்குப் பெரிது என்று தெரிவித்திருந்தார்.

எனவே ஞானசார தேரரும் அவர் சார்ந்த தரப்பினரும் முல்லைத்தீவு நீதிமன்றின் கட்டளையை அவமதித்துச் செயற்பட்டமை மற்றும் கருத்துக்களை வெளியிட்டமை ஆகியவை தொடர்பில் அவர்களுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனச் சட்டமா அதிபரால் எழுத்துமூல உறுதிமொழி வழங்கப்படவேண்டும்.

சட்ட மா அதிபரின் உறுதிமொழி எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன் கிடைக்காவிடின் அடுத்த வாரமும் சேவைப் புறக்கணிப்பைத் தொடர்வதா என்பது தொடர்பில் ஆராயப்படும் என்று வடக்கு மாகாண சட்டத்தரணிகள் அறிவித்துள்ளனர். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## குற்றமிழைக்கும் மமதைப் போக்கை தூண்டிவிட்டிருக்கும் பொதுமன்னிப்பு

தண்டனை என்பது இழைத்த குற்றத்துக்காக – தவறுக்காக – சுமத்தப்படும் ஒரு சுமை.

ஒருவன் தான் செய்த தவறை உணர்ந்து திருந்திக்கொண்டு மீண்டும் அதைச் செய்யாமல் இருக்க அவனுக்குத் தரப்படும் வாய்ப்பு.

தவறு செய்வதும் குற்றங்களை இழைப்பதும் மனித இயல்பே.

சட்ட திட்டங்களை, ஒழுக்க விழுமியங்களை, நீதி முறைமைகளை, மனிதப் பண்பியல்புகளை, நெறிமுறையான செயற்போக்குகளை மீறிக் குற்றங்களும் தவறுகளும் செய்யப்படுகின்ற போதும் ஒருபுறம் உடல் ரீதியாகவும், மறுபுறம் மன ரீதியாகவும், இன்னொருபுறம் உடைமை, சுதந்திரம் போன்றவை ரீதியாகவும் தண்டனைகள் வழங்கப்படுவதும், விதிக்கப்படுவதும் வழமை.

அதன் நோக்கம் வெறுமனே இழைத்த குற்றத்துக்கான மன அல்லது உடல் ரீதியான அந்தரிப்பையோ, பாதிப்பையோ ஏற்படுத்தித் தண்டிப்பது மட்டுமல்ல, அதற்கும் அப்பால் சென்று இன்னொரு தடவை அதேபோன்ற குற்றங்களை இழைக்காமல் இருப்பதற்கான நல்லறிவை – புத்தியை – ஊட்டுவதும், அத்தகைய நற்பண்பியல்புக்கு மீள வைப்பதற்கான மனநிலையை ஏற்படுத்துவதும் கூட.

ஆனால், ஒரு குற்றத்துக்காக விதிக்கப்படும் தண்டனையும் அதைத் தொடர்ந்த நடவழக்கைகளும் அதே குற்றங்களை மீளப் புரிவதற்குத் தூண்டுமானால், அத் தண்டனை முறையில் ஏதோ பெரும் தவறு இருக்கின்றது என்றுதான் அர்த்தம்.

நீதிமன்றங்களை அவமதித்து அட்டகாசம் புரிந்தமைக்காக இலங்கையின் உயர்நிலை நீதிமன்றங்களினாலும் கீழ்நிலை நீதிமன்றங்களினாலும் கண்டிக்கப்பட்டு, தண்டிக் கப்பட்டு, சிறையில் வாடிய பொதுபலசேனவின் செயலாளர் வண. கலகொட அத்த ஞானசாரதேரருக்கு, விதிக்கப்பட்ட அந்தத் தண்டனையும் அதைத் தொடர்ந்து கட்டவிழ்ந்த விடயங்களும் மீண்டும் ஒரு நீதிமன்ற அவமதிப்பைத் துணிச்சலாக மேற்கொள்ளும் உஷாரை அவருக்குத் தந்து நிற்கின்றமையால், அவருக்கான தண்டனையும், அதைத் தொடர்ந்து கட்டவிழ்ந்த அரசியல் கோமாளித்தனங்களும் தவறான அணுகுமுறைகள் என்பதை நிரூபித்திருக்கின்றன என்றே கூறவேண்டும்.

பன்னிரண்டு ஆண்டுகள் வரை சிறையில் இருக்க வேண்டிய வண. கலகொட அத்த ஞானசார தேரரை, தமக்கேயுரிய விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி பொது மன்னிப்பு அளித்து விடுவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அதன் விளைவு யாது என்பதை நேற்றுமுன்தினம் ஞானசாரதேரர் முல்லைத்தீவில் பண்ணிய அட்டகாசங்கள் நிரூபித்து நிற்கின்றன.

ஞானசார தேரமும், ஏனைய பிக்குகளும் அடாவடித்தனமாக இழைத்த தவறுகள் நீதிமன்ற அவமதிப்புக் குற்றமாகுமா, அந்தச் செயலுக்கு அவரும் அவர் சார்ந்த பிக்குகள் மற்றும் அந்தக் கூட்டத்தில் நின்ற சில பிக்குகளும் மட்டும்தான் காரணமா, அல்லது நீதிமன்ற உத்தரவை உதாசீனம் செய்து தாம் தேர்வு செய்த – இந்துக் கோயிலின் தீர்த்தக்கேணிப் பகுதியில் – மறைந்த பிக்குவின் பூதவுடலை எரிப்பதற்கான பாதுகாப்பை அந்த பிக்குமாருக்கு நேரடியாகப் வழங்கி, அந்தச் செயலைத் தூண்டிவிட்டு அதற்குரிய முழுப் பாதுகாப்பையும் வழங்கிய பொலிஸாரும் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்கு உடந்தையா – என்பவற்றை எல்லாம் நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டியிருக்கும்.

ஆனாலும், தென்னிலங்கை நீதிமன்றங்களில் தாம் செய்த அடாவடித்தனங்களுக்கு எதிராக நீதிமன்றங்கள் வழங்கிய நீண்டகால சிறைத் தண்டனைகளைக் கூட, தூசாக மதித்துத் தூக்கி எறிந்து விட்டு வெளியே வரக் கூடிய மதத் திமிரும், பேரினவாத செல்வாக்கும் தனக்கு இருக்கின்றது என்ற மமதை காரணமாகத்தான் வண. கலகொட அந்த ஞானசாரதேரர் திரும்பவும் ஒரு தடவை நீதிமன்ற உத்தரவைத் தூக்கிக் கடாசிவிட்டு இவ்வாறு அடாவடியில் ஈடுபட்டிருக்கின்றார் என்பது வெளிப்படையான உண்மை.

ஆக, அவருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி வழங்கிய பொதுமன்னிப்பு, அதேபோன்ற நீதிமன்ற அவமதிப்பு, அடாவடித்தனத்தை – அட்டகாசத்தை – புரிவதற்கான குரூரப் பண்பியல்பைத்தான் ஏற்படுத்தியுள்ளது என்பதும் கவலையுடன் நாம் கவனிக்க வேண்டிய விடயமாக இருக்கின்றது.

# பேரினவாதப் பிக்குகளுக்கு கடிவாளத்தைப் பூட்டுங்கள்!

## ஜனாதிபதியிடம் வேலுகுமார் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, செப். 25

"அன்பையும், அஹிம்சையையும் போதித்து தர்மத்தின் வழியில் வாழ வேண்டிய பௌத்த துறவிகளில் ஒரு சிலர் காவி உடையைப் பாதுகாப்புக் கவசமாகப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் இலாபங்களுக்காக இனவாதத்தை விதைத்து வருகின்றனர். அதுமட்டுமல்ல நாட்டில் சட்டம், ஒழுங்கையும் மதித்து செயற்படாமல் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றனர். இதற்கு நீராவியடி பிள்ளையார் கோவில் வளாகத்தில் அரங்கேறிய அடாவடி சம்பவம் மற்றுமொரு சாட்சியாகும்."

– இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் சுட்டிக்காட்டினார்.

நீதிமன்ற உத்தரவுகளை மீறி, முல்லைத்தீவு – பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகப் பகுதியில் பௌத்த பிக்குவின் உடல் பலவந்தமாக தகனம் செய்யப்பட்டுள்ள சம்பவத்தை வன்மையாகக் கண்டித்து வேலுகுமார் எம்.பி. நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

பௌத்த மதமும் அதன் கோட்பாடுகளும் மற்றும் புத்த பெருமானின் தர்ம சிந்தனைகளும் உலக நீதிக்கு வழிகாட்டுகின்றன. மனித சமூகத்தையும் நல்வழிப்படுத்துகின்றன. இதன்காரணமாகவே ஏனைய மதத்தவர்களும் பௌத்த சமயத்தை மதித்து செயற்படுகின்றனர்.

ஆனால் 'காவி' உடை அணிந்து கொண்டு புத்தரின் பெயரில் ஒரு சில பௌத்த துறவிகள் அதர்ம வழியில் செயற்பட்டு ஏனைய மதத்தவர்களை அடக்கி ஆளவே தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர். புத்த பெருமான் இருந்திருந்தால் இத்தகைய பேரினவாத பிக்குகளால் திட்டமிட்ட அடிப்படையில் அரங்கேற்றப்படும் சம்பவங்களைக்கண்டு இரத்தக் கண்ணீர் வடித்திருப்பார். அந்தளவுக்கு சட்டத்தையும், ஒழுங்கையும் கையிலெடுத்து – நீதிமன்ற கட்டளைகளையும் மதிக்காமல் அடாவடியில் ஈடுபட்டு நாட்டில் காட்டாட்சியை ஏற்படுத்த களம் அமைத்துவருகின்றனர்.

பௌத்த பிக்குவின் சடலத்தை தகனம் செய்வதற்கான முயற்சியை மனிதாபிமான அடிப்படையில் முன்னெடுத்திருந்தால் சிலவேளை விட்டுக்கொடுப்புகளைகூட சம்பந்தப்பட்ட தரப்புகள் செய்திருக்கலாம். ஆனால், சண்டித்தனம் காண்பித்து, மக்களை மிரட்டி பௌத்த மேலாதிக்கத்தை முல்லை மண்ணில் விதைக்க இனவாத பிக்குகள் முற்பட்டதாலேயே சட்டத்தின் பாதுகாப்பை நாடவேண்டிய நிலை ஏற்பட்டது.

இதன்படி ஆலய வளாகத்தில், பௌத்த பிக்குவின் உடலை எரிக்கவோ, புதைக்கவோ கூடாது என்றும், நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு எதிரேயுள்ள இராணுவ முகாமுக்குப் பின்புறமாக, கடற்கரைப் பகுதியில் நீதிமன்றம் அடையாளப்படுத்தும் இடத்திலேயே சடலத்தை எரிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் கட்டளையிட்டது.

ஆனால், நீதிமன்ற உத்தரவுக்கு மதிப்பளிக்காமல் அதனை அப்பட்டமாகமீறும் வகையில் ஆலயத்துக்கு அருகேயுள்ள கேணி அமைந்துள்ள இடத்தில் பிக்குவின் உடலை எரிப்பதற்கு ஞானசார தேரர் தலைமையிலான பேரினவாத இனவாத கும்பல் நடவடிக்கை எடுத்திருந்தது. அதுமட்டுமல்ல சட்டத்தரணிகளையும் அச்சுறுத்தியுள்ளனர். பௌத்த பிக்குகளின் இந்த செயற்பாட்டை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்பதுடன் சட்டத்தின் பிடிக்குள் இருந்தும் தப்பவேகூடாது. அரசு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். அதற்கான அழுத்தங்களை நாம் பிரயோகிப்போம்.

பௌத்த பிக்குகள் என்ற போர்வையில் சிலர் தொடர்ச்சியாக நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தி இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை குழப்பி மத முறுகலை ஏற்படுத்த முயற்சித்துவருகின்றனர். இவர்களுக்கு எதிராக சட்டமும் தனக்கே உரிய பாணியில் கம்பீரமாக செயற்பட்டாலும் அரசியல் தலையீடுகள் காரணமாக தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்கின்றனர். இதனால் சட்டம் அனைவருக்கும் சமனானது என்ற நீதிக் கோட்பாடும் மீறப்படுகின்றது.

குறிப்பாக ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி பொது மன்னிப்பு வழங்கினார். வெளியில் வந்த பின்னர் அவர் தற்போது என்ன செய்கின்றார்? மீண்டும் பழைய வழியிலேயே பயணத்தை ஆரம்பித்துள்ளனர். எனவே, பௌத்த மதத்தை மதிக்கும் உண்மையான அரச தலைவன் என்றால் பௌத்த தர்மத்துக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு எதிராக இனியாவது கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். பேரினவாதிகளுக்கு கடிவாளம் பூட்ட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் இலங்கையை மீண்டும் இருண்ட யுகம் சூழ்ந்து கொள்ளும் நிலைமையே உருவாகும்.

அதேவேளை, நாட்டின் அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை உண்மையே. ஆனால், ஏனைய மதங்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல் ஒரு மதத்தை ஆக்கிரமித்து – அழித்துதான் பௌத்த மதத்தை நிலைநாட்ட வேண்டும் என புத்தரும் கூறவில்லை. எனவே, இனவாத பிக்குகள் எதற்காக இவ்வாறு செயற்படுகின்றனர். இதன் பின்னணி என்ன? இவர்களை இயக்கும் சக்திகள் எவை? என்பன கண்டறியப்படவேண்டும் – என்றார். (ஐ)

# தபால் மூல வாக்களிப்பு ஒக். 30,31 ஆம் திகதிகளில்

ஜனாதிபதித் தேர்தலின் தபால்மூல வாக்களிப்பு வரும் ஒக்ரோபர் 30ஆம், 31ஆம் திகதிகளில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால்மூல வாக்களிப்பது தொடர்பான சுற்றறிக்கை உரிய அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக இம்மாதம் 30ஆம் திகதி இரவு 12 மணிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம்.

இந்தக் கால எல்லைநீடிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் அதனை உறுதிப்படுத்தி தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு வழங்குவது அவசியமாகும்.

தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை நிரப்புவதற்கு 2018ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தின் ஊடாக அல்லது 1919 தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. (ஐ)

### நாளை

26.09.2019
வியாழக்கிழமை

நட்சத்திரம்: மகம் பி.இ 2.39 வரை
திதி : துவாதசி காலை 7.51 வரை

இராகுகாலம் : 1.32 – 3.02
சுப நேரம் : 7.32 – 9.02

பிரதோஷ விரதம்

# 5 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, செப். 25

தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக, மண்சரிவு அபாயம் உள்ளிட்ட அனர்த்தங்கள் ஏற்படும் நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில், காலி, மாத்தறை, களுத்துறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. (ஐ)

# மண்சரிவில் சிக்கி மூவர் காயம்

கொழும்பு, செப். 25

பொத்தல, அமுகொட பகுதியில் இடம்பெற்ற மண் சரிவில் சிக்கி மூவர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, வீடு மற்றும் லொறியொன்றுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதன்போது காயமடைந்த சிறுமி மற்றும் 2 பெண்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# சட்டத்தைப் புறந்தள்ளும் இனவாதிகளின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி இடுக!

## கிழக்கு முன்னாள் முதல்வார் நஸிர் அஹமட்

கொழும்பு, செப். 25

சட்டம் அனைவருக்கும் பொதுவானதுஅதனைப் பாதுகாக்கவேண்டியது அனைத்துத் தரப்பினருக்கும் உரித்தானது. இனவாதிகள் இதற்கு வதிவிலக்கானவர்கள் அல்லர். அவர்கள் இதனை மீறும்போது – புறந்தள்ளும் போது அதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது நீதித் துறையினதும், அரசினதும் கடமையாகும். எனவே முல்லைத் தீவில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் நீதித்துறையின் கௌரவம் காப்பாற்றப்பட வேண்டியதும் சட்டம் நிலை நாட்டப்பட வேண்டியதும் அவசியமாகும். இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுத்து இவற்றுக்கு முற்றுப் புள்ளியிட வேண்டும்.



– இவ்வாறு தெரிவிக்கின்றார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸிர் அஹமட்.

இது குறித்த அவரது செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

சட்டத்தைக்கையில்எடுத்துக்கொண்டு அவ்வப்போது தத்தமது செயற்பாடுகளை – இஷ்டத்துக்கு முன்னெடுக்கும் இனவாதச் சக்திகளின் செயற்பாடுகள்; நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதனை உரிய முறையில் கட்டுப்படுத்துவதற்கு அரசுகள் தவறியே வந்துள்ளன. ஜனநாயகவாதிகள் எனத் தம்மை அடையாளப்படுத்துவோரும் இந்த சக்திகளின் இஸ்டங்களுக்கு பணிந்தே பயணித்துக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய வழிமுறைகள் காரணமாகவே தற்போது நாட்டில் பலதரப்பட்ட அத்துமீறல் சம்பங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வாக்காளர்களை இலக்காகக் கொண்டு தத்தமது அரசியல் லாபம் கருதிச் செயற்படும் கலாசாரம் ஆளுமை பெற்றிருப்பதன் காரணமாகவே. இத்தகைய சக்திகளை கட்டுப்படுத்த முடியாத அவலம் அரசாங்கங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன.

இதன் காரணமாகப் பல்லினச் சமூகங்கள் வாழுகின்ற இந்த நாட்டில் சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளும் உரித்துகளும் வாழ்வியலும் வாழ்விடங்களும் அவ்வப்போது கேள்விக்குறிகளைச் சுமந்து கொண்டு பரிதவிப்புகளைப் பார்த்துக் கொண்டு நிற்கின்றன.

நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டம் இங்கு வாழும் அனைவரும் சமமானவர்களா என்ற கேள்வி எழும் நிலைமைகள் தற்போது ஏற்பட்டுள்ளது. எனவே சகல ஜனநாயகச் சக்திகளும் இத்தகைய நடைமுறைகள் தொடர்ந்து நடைபெறாத வண்ணம் தீர்க்கமாகச் செயற்பட்டு நீதியையும் சட்டத்தையும் அவற்றின் ஒழுங்குகளையும் நிலை நாட்ட துணிந்து செயற்பட முன்வர வேண்டும் என கேட்டுக் கொள்ள விரும்புகிறேன் – என்றுள்ளது. (ஐ)

# மிலேனியம் சவால் நன்கொடையை இலங்கை இன்னும் இழக்கவில்லை!

கொழும்பு, செப். 25

தமது 48 கோடி டொலர் கொடையை இலங்கை இன்னமும் இழந்து விட வில்லை என்று, அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மிலேனியம் சவால் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் ஜென்னர் எடெல்மன் கருத்து வெளியிடுகையில் –

'கடந்த வாரம் மிலேனியம் சவால் நிறுவனத்தின் சபை கூட்டத்தில் இலங்கைக்கான கொடை உடன்பாடு தாமதமடைவது குறித்து பேசப்பட்டது. அடுத்த நகர்வு குறித்தும் ஆராயப்பட்டது.

ஆண்டு தெரிவு செயல்முறைகள் குறித்த சபையின் அடுத்த கூட்டம் டிசெம்பர் மாதம் நடைபெறும். அப்போது, அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும்.

இலங்கைக்கான கொடை தொடர்பான இறுதி முடிவு டிசெம்பர் மாதமே எடுக்கப்படும்.

இப்போது நாம் அதிகமாக எதையும் செய்யமுடியாது. டிசெம்பர் கூட்டத்திற்கு முன்னர், புதிய அரசின் கீழ், இதை அங்கீகரிக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இதற்கு நேரம் எடுக்கும் என்பதை நான் புரிந்து கொள்கிறேன் – என்றார்.

# மின்தடை

யாழ்ப்பாணம், செப். 25

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக் கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**மன்னார் பிரதேசத்தில்–**

எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, Timex ஆடைத் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, Industrial Estate I & II - Palmyra house தலைமன்னார் கடற்படைமுகாம், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன திட்டம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.




# பதப்படுத்திய கடலட்டைகளை கடத்த முயற்சித்த இருவர் கைது

சென்னை, செப். 25

மன்னார் வளைகுடா கடல் வழியாக இலங்கைக்கு 70 லட்சம் ரூபா மதிப்பிலான கடல் அட்டைகளைக் கடத்த முற்பட்ட இருவரை தமிழகப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதன்போது 350 கிலோ கிராம் நிறைகொண்ட கடல் அட்டைகளைப் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட கடல் அட்டைகள், மண்டபம் வனத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான இரகசியத் தகவலைப் பெற்றுக்கொண்ட பொலிஸார் இராமேஸ்வரப் பகுதியில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போதே கடல் அட்டைகள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# மோடியின் ஹூஸ்டன் சொற்பொழிவு மூலம் உலக நாடுகளை இந்தியா கவர்ந்து ஈர்ப்பு

## அவரின் ராஜதந்திரத்தைப் பாராட்டுகின்றனர் வல்லுநர்கள்

உலக அளவில் கவனத்தை ஈர்த்துள்ள மோடியின் ஹூஸ்டன் சொற்பொழிவு, ஒரே உரைவீச்சில் பல தரப்பினருக்கு கூர்மையான செய்திகளை கொண்டு சேர்த்திருக்கின்றன என வல்லுநர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

ஹூஸ்டன் என்ஆர்ஜி அரங்கில் திரண்டிருந்தவர்களுக்கு மட்டுமல்ல, அதிபர் டிரம்புக்கும் அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சியினருக்கும், அமெரிக்க வாழ் இந்தியர்களுக்கும், இந்திய மக்களுக்கும் பாகிஸ்தானுக்கும் ஒட்டு மொத்த உலகிற்குமே பிரதமர் மோடி உரையாற்றினார் என்பதுதான் அவரது ஹூஸ்டன் உரையின் தனிச் சிறப்பு என வல்லுநர்கள் பாராட்டு கின்றனர்.

வெளிநாடு வாழ் இந்தியர்கள் மத்தியில் பிரதமர் மோடி உரையாற்றுகின்றமை புதிதல்ல என்றபோதிலும், ஹூஸ்டன் உரை நிகழ்த்தப்பட்ட காலகட்டம் என்பது மிக முக்கியமானது. ஜம்மு–காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்துள்ள அதேநேரம், அதை சர்வதேசபிரச்சினையாக்க முயற்சிசெய்யும் பாகிஸ்தானின் முயற்சிகளை முறியடித்தாக வேண்டும், அமெரிக்காவின் நம்பிக்கையை வென்றாக வேண்டும் என்ற நிலையில் இந்த உரை நிகழ்த்தப்பட்டுள்ளது.

வர்த்தக விவகாரத்தில் இந்தியா – அமெரிக்கா இடையே உரசல்கள் எழுந்துள்ள நேரத்திலும், காஷ்மீர் விவகாரத்தில் மேற்கத்திய ஊடகங்களில் தவறான சித்திரிப்புகள் எழும் நேரத்திலும், உலக அளவிலும் இந்தியாவிலும் பொருளாதார வளர்ச்சி குறித்த கவலைகள் நிலவும் நேரத்திலும் இந்த உரையை பிரதமர் ஆற்றியுள்ளார். அது மட்டுமல்ல, 50 ஆயிரம் பேர் திரண்ட கூட்டத்தில் இந்தியப் பிரதமருடன், அமெரிக்க அதிபரும் பங்கேற்றார் என்பது, இதுவரை இல்லாத ஒரு வரலாறு என்பது ஹூஸ்டன் உரையின் முக்கியத்துவத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.



ஆப்கானிஸ்தானில் தலையீடு, காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்காவின் ஆதரவைப் பெற முயற்சி என பாகிஸ்தான் கடும் முயற்சிகளை மேற்கொள்ளும் இந்த நேரத்தில், அமெரிக்காவுடனான சுமூக உறவு என்பது மிகவும் அவசியமாகும். ஜம்மு – காஷ்மீருக்கு அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டிருந்த சிறப்பு அந்தஸ்து ரத்து மற்றும் அங்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை காட்டி, அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் ஆதரவைப் பெற முடியும் என பாகிஸ்தான் கருதும் வேளையில், அந்த முயற்சிகளைத் தடுத்தாக வேண்டும்.

இதை மனதில் கொண்டும், டிரம்பின் தற்பெருமிதம்மிக்க ஆளுமை ஒருபுறம் இருந்தபோதிலும், அடுத்த அதிபர் தேர்தலில் வென்றாக வேண்டும் என்ற அவரது கணக்கீடுகளையும் மனதில் கொண்டே மோடியின் பேச்சு இருந்தது என வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். டிரம்பின் தலைமை, அமெரிக்க பொருளாதாரத்தை வளர்த்தெடுக்கும் அவரது முயற்சிகள், ஒப்பந்தங்களுக்கு இணங்கச் செய்யும் திறமை, அமெரிக்காவின் வளர்ச்சிக்கு அவர் உறுதிபூண்டிருப்பது என்ற அம்சங்களை குறிப்பிட்டு மோடி பாராட்டியதும் அதனால்தான். சுருக்கமாக சொன்னால் டிரம்பை இந்தியாவின் வசப்படுத்தும் முயற்சியில் மோடி வெற்றி பெற்றுள்ளார் என்றே அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

தீவிரவாதத்திற்கு எதிரான போரை மையப்படுத்தி பாகிஸ் தானை தனிமைப்படுத்துவது, ஜனநாயகம், கலாசார பன்முகத்தன்மையின் அடிப்படையில் இந்தியா தொடர்ந்து கட்டியெழுப்பப்படும் என்பதை உறுதிப்படுத்துவது, இதுவே இரு நாடுகளையும் பிணைக்கும் அம்சம் என்பதை அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சியினருக்கும் உணர்த்துவது, பொருளாதார சீர்திருத்தங்களிலும் நவீனமயமாக்கத்திலும் இந்தியா உறுதியாக இருப்பதை உலக தொழில் – வர்த்தக சமூகத்தினருக்கு உணர்த்துவது ஆகியவற்றை இலக்குகளாக கொண்டு மோடியின் ஹூஸ்டன் உரை அமைந்திருந்தது.

இதேபோல அமெரிக்க வாழ் இந்தியர்களையும் இலக்காக கொண்டு அமைந்திருந்த மோடியின் உரை அவர்களது முக்கியத்துவத்தை உணர்த்தியிருப்பதோடு, அமெரிக்காவில் செல்வாக்குமிக்க சமூகமாக அவர்கள் தங்களை அடையாளம் காணவும் உதவியிருக்கிறது. அந்த வகையில் அமெரிக்க வாழ் இந்தியர்களுக்கும் மோடி உத்வேகம் அளித்திருக்கிறார். இறுதியாக, ஹூஸ்டன் சொற்பொழிவு மூலம் இந்திய மக்களுக்கும் மோடி உரையாற்றியிருக்கிறார்.


அமெரிக்க அதிபர் டிரம்புடன் ஒரே மேடையில் தோன்றி, உலக அரங்கில் இந்தியா தனக்குரிய முக்கியத்துவத்தும் பெற்று முத்திரை பதித்திருப்பதை இந்திய மக்களுக்கு அவர் உணர்த்தியிருக்கிறார். ஹூஸ்டன் உரைமூலம் ராஜதந்திர வெற்றிக் கொடி நாட்டியிருக்கிறார் மோடி என்பதே சர்வதேச பார்வையாளர்களின் கருத்தாக உள்ளது.

# 12 வயது பள்ளி சிறுமிக்கு 30 பேர் பாலியல் கொடுமை

## கேரளாவில் தந்தை உட்பட மூவர் கைது

திருவனந்தபுரம், செப்.24

கேரளாவில் 12 வயது பள்ளி சிறுமிக்கு 30 பேர் பாலியல் கொடுமை செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக சிறுமியின் தந்தை உள்பட 3 பேரை பொலிஸார் கைது செய்தனர்.



கேரள மாநிலம் மலப்புரம் பகுதியைச் சேர்ந்த 12 வயது சிறுமி ஒருவர் அந்த பகுதியில் உள்ள பள்ளிக்கூடத்தில் படித்து வருகிறார்.

அந்த சிறுமிக்கு தொடர்ந்து பாலியல் கொடுமை நடந்து வருவதாக பள்ளி நிர்வாகத்திற்கு அந்தப் பகுதி மக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்தன. இதனால் பள்ளி நிர்வாகத்தினர் அதுபற்றி அறிந்து கொள்ள அந்த சிறுமியை தனியாக அழைத்து விசாரித்தனர்.

சிறுமியிடம் நடத்தப்பட்ட கவுன்சிலிங்கில் அவருக்கு பாலியல் கொடுமை நடந்தது உண்மை என்று தெரியவந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர்கள் இந்த தகவலை குழந்தைகள் நல அதிகாரிகளுக்குத் தெரிவித்தனர். அதைத்தொடர்ந்து குழந்தைகள் நல அதிகாரிகள் அந்த பள்ளிக்கூடத்திற்கு சென்று சிறுமியிடம் விசாரணை நடத்தினார்கள். அப்போது அந்த சிறுமி தனக்கு நடந்த பாலியல் கொடுமைகள் பற்றி அவர்களிடமும் கண்ணீருடன் கூறினார்.

அப்போது அந்தச் சிறுமிக்கு கடந்த 2 ஆண்டுகளாக பாலியல் கொடுமை நடந்த திடுக்கிடும் தகவல் வெளியானது. 30 இற்கும் மேற்பட்டவர்கள் அந்தச் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்து உள்ளனர். இந்த கொடூர சம்பவத்திற்கு அந்தச் சிறுமியின் பெற்றோரும் உடந்தையாக இருந்த தகவலும் பொலிஸ் விசாரணையில் வெளியானது. அதைத்தொடர்ந்து அந்த சிறுமியின் தந்தை மற்றும் செங்கலங்காடி பகுதியைச் சேர்ந்த 3 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

# பல்வேறு நாட்டு தலைவர்களுடன் நியூயோர்க்கில் மோடி சந்திப்பு



அமெரிக்காவில் நடைபெற்ற ஐ.நா. பருவநிலை மாற்றம் தொடர்பான கூட்டத்தின் இடையே பல்வேறு நாடுகளின் தலைவர்களை மோடி சந்தித்து பேசினார்.

அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஐ.நாவின் பருவநிலை மாற்றம் தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார். இந்த கூட்டத்துக்கு இடையே பல்வேறு நாடுகளின் தலைவர்களை மோடி சந்தித்து இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக பேச்சு நடத்தினார்.

ஜேர்மன் அதிபர் ஏஞ்சலோ மெர்கல், இத்தாலி பிரதமர் கியுசேப் கோண்ட், கத்தார் மன்னர் பின் ஹமத், கொலம்பியா அதிபர் இவான் டியூக் மார்கஸ், நைஜர் அதிபர் இசோபு முகமது, நமிபியா அதிபர் ஹேக் ஜீன்காப், மாலைதீவு அதிபர் இப்ராகிம் முகம்மது சோலி, பூட்டான் பிரதமர் லோட்டே ஷெரிங், நெதர்லாந்து பிரதமர் மார்க் ருட்டே ஆகிய தலைவர்களை சந்தித்து பேசினார்.

இந்தச் சந்திப்பின்போது வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறை களில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக பேசப்பட்டது.

மேலும், யுனிசெப் அமைப்பின் செயல் இயக்குநர் ஹென்றிட்டாவையும் பிரதமர் மோடி சந்தித்து பேசினார். இந்தச் சந்திப்பின் போது, இந்தியாவில் குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் ஆகிய வற்றுக்காக அரசு எடுத்த நடவடிக்கைகளை மோடி சுட்டிக்காட்டினார்.

# மாணவர்கள் தாக்கி ஓட்டோ சாரதி மரணம்

காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டில் பள்ளி மாணவர்கள் தாக்கியதில் ஓட்டோ சாரதி உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

செங்கல்பட்டு வேதாசலம் நகரில் உள்ள தனியார் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் 3 பேர் நேற்றுமுன்தினம் பிற்பகல் இருசக்கர வாகனத்தில் சென்றுள்ளனர். செங்கல்பட்டு அனுமந்தபொத்தேரியைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான திலீப்குமார் என்பவர் பள்ளி அருகே தனது ஓட்டோவை ஓட்டிச் சென்றபோது மாணவர்கள் வந்த வாகனம் மோதியுள்ளது.

இதுதொடர்பாக திலீப்குமாருக்கும், மாணவர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாகி உள்ளது. அப்போது திலீப்குமாரை மூன்று பள்ளி மாணவர்களும் சரமாரியாக தாக்கியபின், மாணவன் ஒருவன் ஓட்டோவை ஓட்டிக்கொண்டு தப்பியோட மற்ற இருவரும் தங்களது வாகனத்தில் தப்பியோடி விட்டனர்.

இத்தாக்குதலில் படுகாயமடைந்த திலீப்குமார் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் உயிரிழந்தார்.

# கோட்டாவை ஆஜராக யாழ். நீதிமன்றம் விடுத்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை

கொழும்பு, செப். 25

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆஜராகுமாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விடுக்கப்பட்டிருந்த அழைப்பாணையை இரத்துச்செய்து மேன்முறையீட்டுநீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு தன்னால் அங்கு ஆஜராக முடியாது என கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது.

இதன்போது அந்த மனுவை ஏற்றுக் கொண்ட திபாலி விஜேசுந்தர மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய நீதியரசர்கள் இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்



பித்துள்ளனர்.

அத்துடன், இந்த மேன்முறையீட்டின் மேலதிக விசாரணைகள் எதிர்வரும் டிசெம்பர் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் யாழ். நகரில் நடைபெறவிருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்காலில் வைத்துக் காணாமல் ஆக்கப்பட்டனர்.

இது தொடர்பாக அவர்களின் உறவினர்களால் ஆட்கொணர்வு மனு 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டுநீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணையின் போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்றத்துக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனையடுத்து யாழ். நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின. இந்நிலையில் அந்தக் காலப் பகுதியில் பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றியமையால் கோட்டாபயவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு தன்னால் அங்கு ஆஜராக முடியாது என கோட்டாபய மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முருகபூபதியின் இலங்கையில் பாரதி ஆய்வு நூல் வெளியீட்டரங்கு

கொழும்பு, செப்.25

படைப்பிலக்கிய வாதியும் ஊடகவியலாளருமான முருகபூபதி எழுதிய இலங்கையில் பாரதி (ஆய்வு) நூலின் வெளியீட்டு அரங்கு கொழும்பு தமிழ்ச் சங்கம் விநோதன் மண்டபத்தில் எதிர்வரும் ஒக்டோபர்மாதம் 05 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

மகாகவி பாரதியின் படைப்பாளுமை பண்புகள் இலங்கையில் ஏற்படுத்திய தாக்கம் குறித்து ஆய்வு செய்யப்பட்ட இந்நூலின் உள்ளடக்கம் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் காலைக்கதிர் இதழில் 40 வாரங்கள் தொடராக வெளியானது. அத்துடன் ஆஸ்திரேலியா தமிழ்முரசு இணைய இதழிலும் மறுபிரசுரமானது.

இலங்கையில் பாரதி நூல் வெளியீட்டரங்கு செல்வி பாமினி செல்லத்துரையின் வரவேற்புரையுடன், ஈழத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் தலைமையில் நடைபெறும்.

யாழ். காலைக்கதிர் ஆசிரியர் ந.வித்தியாதரன் நூல் வெளியீட்டுரை நிகழ்த்துவார். ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரன், பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம். எம். ஜெயசீலன், திருமதி கௌரி அனந்தன், திருமதி வானதி சந்திரா ஆகியோர் நூல் மதிப்பீட்டுரை வழங்குவர். நூலாசிரியர் முருகபூபதி ஏற்புரை நிகழ்த்துவார்.

நிகழ்ச்சியில் இலக்கிய கலந்துரையாடலும் தேநீர் விருந்தும் இடம்பெறும். கலை, இலக்கிய அன்பர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

## லண்டனில் சிறப்புற்ற அரங்கேற்றம்





லண்டனில் வசிக்கும் சிவகுமாரன் சிவானுஜன், சிவகுமாரன் வராகி ஆகியோரது இசை அரங்கேற்ற நிகழ்வு கடந்த 21.09.2019 சனிக்கிழமை இலண்டனில் உள்ள வோட்டர்ஸ்மீற் கலையரங்கத்தில் சிறப்புற இடம்பெற்றது.

சிவானுஜன் மிருதங்கம் வீணை ஆகிய இசை அரங்கேற்றங்களையும் வராகி வாய்ப்பாட்டு புல்லாங்குழல் ஆகிய இசை அரங்கேற்றங்களையும் மேற்கொண்டிருந்தனர். தாயாரான இசையாசிரியர் ராஜினி சிவகுமாரன் குருவாக இருந்து இவர்களது அரங்கபிரவேசத்திற்கு வழிகாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.











4



பாற்கடல்
மு.சிவநேசன்
sivanesan@usa.com

# உறை கடலில் ஊடுருவல்

**(நேற்றைய தொடர்ச்சி)**

புறப்படும் வேளையில் மனைவியின் கண்களில் ஏக்கம். ஐந்து பெண் பிள்ளைகள் அவளது பொறுப்பில். இப்படி இவன் அடிக்கடி வேட்டை என்று உல்லாச மாக கிளம்பி விடுவது வழமை தான். சமர்த்தன் என்று அவள் நம்பினாலும் ஒவ்வொரு முறையும் மீண்டும் கண்களில் பட்ட பின்புதான் நிம்மதிப் பெருமூச்சு பிறக்கும்.

ஒரு கார் அளவிற்கு அதாவது பதினைந்து அடி நீளமான அந்தச் சறுக்கு வண்டியில் எதிர்பாராத தாமதங்களை சமாளிக்கும் வகையில் தேவையான பொருள்களை ஏற்றிக் கொண்டு பயணத்தை தொடங்கி இருந்தான் அவன். சுமையில் சிக்கனத்தையும் பேண வேண்டிய இக்கட்டான நிலைமை தான். தேவைப்படும் என்று எல்லாவற்றையும் தாராளமாக எடுத்துச் சென்றால் ஏற்ற இறக்கங்களில் சமாளிக்க முடியாமற் போய்விடும்.

மலைகள் பள்ளத்தாக்குகள் வெடிப்புக்கள் பாறைப் பிராந்தியங்கள் என்றெல்லாம் கடந்து வரல் வேண்டும். சறுக்கு வண்டிச் சுமைகளை இழக்கக் கூடாது. படுக்கையை, போர்வையை தொலைத்து விட்டதால் குளிரைச் சமாளிக்க அடுப்பை பற்ற வைத்தாக வேண்டிய நிலைமை.

இம்முறை மனைவி சமந்தா சற்றுக் கலங்கித்தான் போனாள். தொலைத் தொடர்புக் கருவி தொலைந்தது தெரியாமல் அவனது தொடர்புகள் இன்றித் தவித்தாள்.

தொலை துருவ எல்லை நண்பனது முகநூல் பதிவொன்றில் அவன் இவனை மூன்று தினங்களாக தொடர்பு கொள்ள தேடுவதாக வெளியிட்ட ஏக்கம் சமந்தாவின் கண்களில் பட்டதும் அது வயிற்றில் புளியைக் கரைத்தது. இப்படிப் புறப்பட்ட பலர் காணாமல்போன கதைகளையும் பின்னர் பல மாதங்கள் கழிந்து உடலங்கள் கண்டுபிடிக்கப்பட்ட வரலாறுகளையும் அவள் அறிவாள்.

தேடுதல் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன. சறுக்கு வண்டி நகர்ந்த தடயங்களை பனிப் பாளங்களில் அந்தக் காலநிலையில் கண்டுபிடிப்பது விமானங்களை பொறுத்தவரையில் சாத்தியமாகாது.

கூனூவைத் தேடியும் பலர் சறுக்கு வண்டிகளில் கிளம்பினார்கள். நாளாக நாளாக அவன் உயிரோடு இருப்பதற்கான சாத்தியங்கள் மிகவும் குறைவடையத் தொடங்கின. துணிந்துதனிப்பட்ட முறையில் அவனைத் தேடி சறுக்கு வண்டியில் கிளம்பியவர்களை பனிப் புயல் விடவில்லை. பல ஆயிரம் சதுர கி.மீ பரந்து கிடக்கும் ஐஸ் பரப்பில் அவனை எங்கே தேடுவதோ?

தகவல் பரவியதும் ருவின் ஒற்றர் ரக விமானம் ஒன்றும் C -130 ஹேகியுல்ஸ் ரக விமானமொன்றும் தேடுதலில் இறங்கிவிட்டன. ஆனால் அவற்றினால் எரிபொருளை விரயமாக்க முடிந்ததே தவிர வேறில்லை.

வீட்டில் பதற்றத்தின் உச்சத்தில் சமந்தா. அவளது முகத்தை ஏக்கத்துடன் பார்க்கும் மூன்று முதல் பதின்மூன்று வரையான வயதுடைய பாசமான ஐந்து பெண் பிள்ளைகள்.


(அங்கே சீதனப் பிரச்சினை கிடையாது. ஐந்து பெண் பெற்றாலும் அவன் ஆண்டியாகவும் முடியாது)

களத்தில் தண்ணீரைச் சுடவைத்து குடுவையில் நிரப்பிக் கொண்ட கூனூ மிகவும் அத்தியாவசியமான பொருள்களை பையில் திணித்தான். வானம் சற்றுத் தெளிவாக இருந்தது. அன்று மே 17. அதிக பாரத்தை சுமக்கும் நிலையில் அவனில்லை. பனிப்பாறை மலைத் தொடர்கள் பள்ளத் தாக்குகளைக் கடந்து நடக்கத் தொடங்கினான். வேறு வழி தென்படவில்லை. அவ்வளவு சுலபமான நடைப் பயணம் அதுவல்ல.



இருபத்தைந்து கி.மீ நடந்திருப்பான். இருட்டி விட்டது. கத்தியைஎடுத்துஒருபனிக்குகையை தோண்டி அதனுள் புகுந்து கொண்டான். சிக்கனமாக சற்று சுடுநீரை பருகி சிறிதாக ஒரு பாண் துண்டைச் சாப்பிட்டு உறங்கி விட்டான்.

விடிந்ததும் மீண்டும் நடை. தொலைவில் விமானங்கள் தென்பட்டன. தேடுதல் பாணியில் அவற்றின் நடமாட்டம் இருந்தாலும் அவற்றை தொடர்புகொள்ள இவனது வானொலி கருவியில் உயிர் இருக்கவில்லை. அவற்றினால் இவனைக் கண்டுபிடிக்கவும் இயலவில்லை.



பனிப்புயல் 60 கி.மீ வேகத்தில் வீசிக் கொடுமை செய்தது. அவனது உடலை கூதல் காற்று கத்தி கொண்டு அறுத்தது. நடந்து நடந்து நம்பிக்கை தளர்ந்து போனது. உடல் குளிர்ந்து கொண்டே போகிறது.

உணவுக் கையிருப்பு தீர்ந்து விட்டது. இனிச் சுமக்க ஏதுமில்லை. தண்ணீர் கிடையாது. உடற் சூட்டில் பனிக் கட்டியை உருக்கி குடிக்க வேண்டிய நிலைமை. பற்றரிகள் செயலிழந்த தொலைத் தொடர்பு சாதனங்கள் சட்டைப் பையில். உறக்கம் இல்லை. உறங்கினால் விறைப்பதை தவிர வேறு வழியில்லை. எனவே நடை நடை நடை.

காற்றோடு போராட்டம். அவனது போர்வையை காற்று பிடுங்கிக் கொண்டது. அது பட்டம் போல பறந்து மறைந்தது. குளிரில் கால்கள் விறைத்துக் கொண்டன. மூன்று நான்கு நாள்களாக தொடர் நடை தவிர வேறு வழி இருக்கவில்லை.

களைத்து விறைத்து ஓய்ந்து சலித்து விழுந்தவன் சற்று உறங்கினானோ மயங்கினானோ தெரியவில்லை. அவனது கனவில் இளைய மகள் அலினா புன்னகைத்தாள். பின்னணியில் மனைவி கலகலத்தாள்.

எங்கிருந்து சக்தி புகுந்ததோ தெரியவில்லை. துடித்து எழுந்தான். அவர்களைக் கண்டாக வேண்டும். வெறி புகுந்து கொண்டது மீண்டும். அங்கே வாழ்க்கை மிகவும் எளிமையானது. ஸீல் வகைகள் உணவுக்கு கிடைக்கும். இவன் உருசிக்கும் சாதனைக்கும் என்று துருவ மான் தேடி வந்தவன். மாட்டிக் கொண்டு தவிக்கிறான்.

நடக்கத் தொடங்கினான் மீண்டும். சமதரை கிடையாது. வழுக்கும் பனிப்படைகள் சில சமயம் நொருங்கிப் புதைக்கும். சிலசமயம் வழுக்கி விழுத்தும்.

ஒரு பறவையின் கத்தல் – இவை எல்லாம் இங்கு சர்வ சாதாரணம் என்றாலும் தெம்பைக் கூட்டியது. செங்குத்தான பனிப் போர்வை கொண்ட மலைகளை ஏறிக் கடக்கவென கால்களைப் பற்றவேண்டிய குழிகளை வெட்டி சறுக்காமல் கடந்து உச்சியை எட்டவும் தொலைவில் முதல் மனிதத் தடயமாக தொலைத் தொடர்பு கோபுர மொன்றின் உச்சி மங்கலாகத் தென்படலானது. என்றாலும் இன்னும் நெடுந் தொலைவு நடந்தாக வேண்டுமே.

மே 20 விடியற்காலை 5.30 மணியளவில் அவன் Repulse Bay புறநகர் பகுதியை எட்டி இருந்தான். நகரம் இன்னமும் விழித்துக் கொள்ளவில்லை. தான் ஓர் அந்நியன். அலைந்த கோலத்தில் வேறு மிகவும் களைத்து இருக்கிறான் என்றெல்லாம் கூச்சப்பட்டாலும் யாரிடமாவது உதவி கேட்டாக வேண்டும். தன்னைத் தேற்றியாக வேண்டும். இனியும் மயங்கிவிடக் கூடாது.

ஒரு வீட்டைத் தட்டினான். ஒரு பெண் வெளிப்பட்டாள். தனது சோகக் கதையை அழாக் குறையாக அவளிடம் சொல்லத் தொடங்கவும் அவளாக முந்திக் கொண்டாள்.

ஓ. உன்னைத்தானே உலகம் முழுவதும் தேடிக் கொண்டுள்ளது. விமானங்கள், கப்பல்கள் பத்திரிகைகள் எல்லாமே தேடுகின்றன. யார் கண்ணிலும் படாமல் எப்படி தப்பி இங்கே வந்தாய்? சரி சரி வா வா அதிசயமே என்று தெம்பான பிரமாதமான வரவேற்பு.

நகரமே அவனை வரவேற்கத் திரண்டு விட்டது. சூடான பானங்கள் உடனடி உணவுகள் முதலுதவி வைத்தியம் என்று உபசாரங்கள் அமோகம்.

உலகம் முழுவதும் தகவல் பறந்தது. தனது கிராமமான Pond Inlet இனை அவன் அடைந்த போது கிராமத்தவர்களின் குதூகலம் பற்றிச் சொல்லத் தேவையில்லை. மனைவி சமந்தாவையும் குழந்தைகள் ஐவரையும் கண்ட போது இவன் ஒரு குழந்தையாக உடைந்து அழுதான்.

**(இன்னும் வரும்)**

# நீராவியடி சம்பவத்தைக் கண்டித்து நேற்று கல்முனைச் சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பு







மட்டக்களப்பு, செப். 25

நீதிமன்ற உத்தரவை மீறி முல்லைத்தீவு, நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து கல்முனை நீதிமன்றங்களில் பணியாற்றும் சட்டத்தரணிகள் நேற்று செவ்வாய்க்கிழமை பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கல்முனை நீதிமன்றத் தொகுதிக்கு முன்பாக சட்டத்தரணிகள் பலர் ஒன்றுகூடி கண்டன ஆர்ப்பாட்டமொன்றிலும் ஈடுபட்டனர்.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி ஷாரிக் காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின்போது சட்டத்தரணிகள் பல் வேறு கோஷங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

நீதித்துறையை அவமதிக்கும் செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் இத்தகைய சம்பவங்களில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

இந்த பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் காரணமாக கல்முனை நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றங்களின் நேற்றைய வழக்கு விசாரணைகளில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வவுனியா நீதிமன்றத்தின் செயற்பாடுகள் முடக்கம்

## சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பால்




வவுனியா, செப். 25

வவுனியாவில் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டமையால் நேற்று நீதிமன்றச் செயற்பாடுகள் பாதிப்புக்கு உள்ளாகின.

செம்மலை நீராவியடி ஆலய விவகாரம் தொடர்பில் பௌத்த பிக்குகள் நீதிமன்றத் தீர்ப்பை அவமதித்தமை மற்றும் சட்டத்தரணிகள் மீது தாக்குதல் நடத்தியமை என்பவற்றைக் கண்டித்து வடக்கு மாகாண சட்டத்தரணிகள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அதற்கமைவாக வவுனியாவிலும் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதன் காரணமாக நீதிமன்ற வழக்குகள் விசாரணைகளின்றித் திகதியிடப்பட்டன. நீதிமன்றம் வந்த மக்களும் வழக்கு விசாரணைகள் நடைபெறாமையால் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, பொலிஸார் மற்றும் திணைக்களங்களால் தாக்கல் செய்யப்பட்ட தண்டப்பணம் செலுத்தும் வழக்குகள் மட்டும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ - 100)

# பாதுகாப்பு காரணமாக மின்துண்டிப்பு

கொழும்பு, செப். 25

கடும் மழை காரணமாக காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் பல இடங்களில் மின்துண்டிப்பு ஏற்பட்டுள்ளது.

சுமார் 8 ஆயிரம் பாவனையாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு நிலையைக் கருத்தில் கொண்டு இந்த மின்துண்டிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனை, மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷனா ஜயவர்தன தெரிவித்தார்.

காலி மாவட்டத்தில் ஆயிரம் வீடுகளுக்கும் மாத்தறை மாவட்டத்தில் ஏழாயிரம் வீடுகளுக்கும் இந்த மின்துண்டிப்பு இடம்பெற்றுள்ளது. (ஐ)

# காணாமல்போன மீனவர்களை மீட்க உதவுமாறு ஹரீஸ் எம்.பி. கோரிக்கை

மட்டக்களப்பு, செப். 25

சாய்ந்தமருது, மாளிகைக் காடுத் துறையில் இருந்து ஆழ்கடல் இயந்திரப் படகில் மீன்பிடிக்காகச் சென்று காணாமல்போன மூன்று மீனவர்களையும் கண்டுபிடித்து, மீட்க உதவுமாறு கடற்படைத் தளபதி மற்றும் கடற்றொழில், நீரியல் வள அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரிடம் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த 18ஆம் திகதி புதன்கிழமை சாய்ந்தமருதைச் சேர்ந்த சீனி முகம்மது ஜுனைதீன் மற்றும் இஸ்மாலெப்பை ஹரீஸ், காரைதீவை சேர்ந்த சண்முகம் ஸ்ரீகிருஷ்ணன் ஆகிய மீனவர்கள் மாளிகைக்காடு துறையில் இருந்து இயந்திரப்படகு ஒன்றில் மீன்பிடிக்காகக் கடலுக்கு சென்றிருந்தனர். காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு காரணமாக ஒரு தினத்துக்கு மட்டும் போதுமான உணவு மற்றும் ஏற்பாடுகளுடன் குறுகிய தூரப் பயணம் சென்ற இவர்கள் ஆறு நாள்களாகியும் இன்னும் கரை திரும்பவில்லை என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களைத் தேடும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ள மீனவர்கள், இதற்கு அரசின் ஒத்துழைப்பைப் பெற்றுத்தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, அவர் கடற்படைத் தளபதி மற்றும் கடற்றொழில், நீரியல் வள அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஆகியோருடன் தொடர்பு கொண்டு, இச்சம்பவத்தை தெரியப்படுத்தியுள்ளதுடன் அவசரமாக தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு, காணாமல் போன மீனவர்களைக் கண்டுபிடித்து, மீட்டுத்தருமாறு வலியுறுத்தியுள்ளார். (ஐ)

northern PC Park
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskada Junction
Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park 0777570124 0215675566
NPcpark 0773366443 0212229581
northernpcpark 0766999597 0212222050
Northern Pc Park 0717772377 0212220388

காலைக்கதிர்
Kalaikathir



# இறுதிக்குள் வல்வை எவ்.சி.

வடக்கு– கிழக்கு பிறீமியர் லீக் தொடரில் கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் வல்வை எவ்.சி அணியை எதிர்த்து நொதேன் எலைட் அணி மோதியது.

ஆட்டத்தின் ஆரம்பம் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியபோதும் இரு அணிகளாலும் கோல்கள் எதனையும் பெற முடியாது போக முதல் பாதி ஆட்டம் சமநிலையில் நிறைவு பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் வல்வை எவ்.சி அணி ஒரு கோலை பெற்று கொள்ள ஆட்ட நேர முடிவில் 01:00 என்ற கோல் கணக்கில் வல்வை எவ்.சி அணி வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது.

வல்வை எவ்.சி அணி சார்பாக ஜோன் இவான்ஸ் ஒரு கோலை பெற்றுக் கொடுத்தார்.



# இங்கிலாந்து அணியில் ஐந்து புதிய முகங்கள்

இங்கிலாந்து அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து ஐந்து போட்டிகள் கொண்ட ரி20 கிரிக்கெட் தொடரில் விளையாடுகிறது. இதற்கான இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. பென் ஸ்டோக்ஸ், சோப்ரா, பட்லர், ஜேசன் ரோய் போன்ற முன்னணி வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.



ஐந்து புதுமுகங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது முடிவடைந்த ரி20 பிளாஸ்ட் தொடரில் சிறப்பாக விளையாடி 549 ஓட்டங்கள் குவித்த 20 வயதேயான டாம் பான்டோன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பான்டோனுடன் பேட் பிரவுன், லெவிஸ் கிரேகோரி, மேத்யூ பார்கின்சன், சாகித் மெஹ்மூத் ஆகியோரும் அணியில் இடம் பிடித்துள்ளனர்.

நியூசிலாந்து தொடருக்கான இங்கிலாந்து ரி20 அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் விவரம்:

1. மோர்கன், 2. பேர்ஸ்டோவ், 3. டாம் பான்டோன், 4. சாம் பில்லிங்ஸ், 5. பேட் பிரவுன், 6. சாம் குர்ரன், 7. டாம் குர்ரன், 8. ஜோ டென்லி, 9. லெவிஸ் கிரேகோரி, 10. கிறிஸ் ஜோர்டான், 11. சாகிப் மெஹ்மூத், 12. தாவித் மலன், 13. மேத்யூ பார்கின்சன், 14. அடில் ரஷித், 15. ஜேம்ஸ் வின்ஸ்.

## ஹென்ரிக்ஸ் தோள்பட்டையில் பலமாக இடித்த விராட் கோஹ்லி

ஹென்ரிக்ஸ் தோள்பட்டையில் வேண்டுமென்றே இடித்த இந்திய அணி தலைவர் விராட் கோஹ்லிக்கு தகுதியிழப்பு புள்ளி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 3 ஆவது ரி20 கிரிக்கெட் போட்டி பெங்களூரில் நடைபெற்றது. ரோகித் சர்மா ஆட்டமிழந்ததும் விராட் கோஹ்லி களம் இறங்கினார். வழக்கத்துக்கு மாறாக விராட் கோஹ்லி ஓட்டங்கள் அடிக்கத் திணறினார்.

அதேசமயத்தில் ரோகித் சர்மாவை வீழ்த்தி இடது கை வேகப்பந்து வீச்சாளரான ஹென்ரிக்ஸ் விராட் கோஹ்லிக்கு நெருக்கடி கொடுத்தார். இதனால் கோபம் அடைந்த விராட் கோஹ்லி ஓர் ஓட்டத்துக்கு ஓடும்போது பந்து வீசிய பின் ஆடுகளத்தில் நின்றிருந்த ஹென்ரிக்ஸ் மீது வேகமாக ஓர் இடி இடித்தார்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத ஹென்ரிக்ஸ் எளிதாக எடுத்துக்கொண்டு சிரித்துக் கொண்டு சென்றுவிட்டார். அப்போது போட்டியை பார்த்துக் கொண்ட ரசிகர்கள், விராட் கோஹ்லிக்கு எப்படியும் அபராதம் விதிக்கப்படும் என்று கூறிக் கொண்டனர். அதன்படியே ஐ.சி.சி. விராட் கோஹ்லியை எச்சரித்தமையுடன், தகுதி இழப்புக்கான ஒரு புள்ளியையும் வழங்கியுள்ளது.

இது குறித்து ஐ.சி.சி தனது இணையத்தளத்தில் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் “இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி எச்சரிக்கப்படுகிறார். அதே போல் வீரர்கள் நன்னடத்தைக்கான விதிமுறையில் முதல் லெவல் குற்றத்தைச் செய்ததற்காக தகுதி இழப்புக்கான ஒரு புள்ளி வழங்கப்பட்டுள்ளது” என்று தெரிவித்துள்ளது.

விராட் கோஹ்லி இதற்கு முன் இதுபோன்று இரண்டு முறை தகுதி நீக்கத்திற்கான புள்ளிகளைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





## தேசிய மட்டச் சதுரங்கப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அணி

*விளையாட்டுத்துறை அமைச்சினால் பதுளையில் அமைந்துள்ள ஊவா மாகாண பொது நூலக மண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் தேசிய மட்டச் சதுரங்கப் போட்டியில் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்ட சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மாவட்ட பெண்கள் சதுரங்க அணி வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடி வருகின்றது.*

*கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத்தின் தொடர் செயற்பாடுகளின் பயனாக மாவட்ட சதுரங்க வரலாற்றில் முதல் முறையாக மாவட்ட சதுரங்க அணியானது தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றி மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்துள்ளமையை அனைவரும் பாராட்டியுள்ளனர்.*

## ஆண்டின் சிறந்த உதைபந்து வீரர் விருதை ஆறாவது முறையாக வென்றார் மெஸ்ஸி

சர்வதேச மற்றும் கழக மட்டப் போட்டிகளில் பிரகாசித்த உதைபந்தாட்ட நட்சத்திரங்களைச் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம். ஆண்டுதோறும் கௌரவிக்கின்றது.

இதற்மைகயநடப்புஆண்டுக்கான சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளன விருது வழங்கும் நிகழ்வு, இத்தாலியின் மிலான் நகரில் கோலாகலமாக நடைபெற்றது.

இதில், ஆண்டின் அதிசிறந்த வீரருக்கான விருதுக்காக போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, பிரான்ஸ் உதைபந்து அணியின் இளம் வீரரான கைலியன் மாப்பே ஆர்ஜென்ரீனாவின் லியோனல் மெஸ்ஸி ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

இதில், ரொனால்டோ மற்றும் மாப்பேயை பின் தள்ளி, உலகின் புகழ் பூத்த உதைபந்து வீரரான ஆர்ஜென்ரீனாவின் லயனல் மெஸ்ஸி, ஆண்டின் அதிசிறந்தவீரர் விருதை ஆறாவது முறையாக வென்றார்.

சர்வதேச மற்றும் கழகமட்டப் போட்டிகளில் அதித ஆற்றலை வெளிப்படுத்தியமைக்காக ஆண்டின் அதிசிறந்த வீரர் விருது லயனல் மெஸ்ஸிக்கு வழங்கப்பட்டது.

இந்த விருதை மெஸ்ஸி வெற்றிகொள்ளும் ஆறாவது சந்தர்ப்பம் இதுவென்பதுடன் இறுதியாக 2015ஆம் ஆண்டு இந்த விருதை வென்றிருந்தார்.

இதற்கு முன்னர் 2009 ஆம், 2010ஆம், 2011ஆம், 2012ஆம் மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் லியோனல் மெஸ்ஸி இந்த விருதை வென்றுள்ளார்.

அத்தோடு, தொடர்ச்சியாக 3 வருடங்கள் இந்த விருதை வென்ற ஒரே ஒரு வீரராகவும் அவர் தனது பெயரை முத்திரை பதித்துள்ளார்.

இதேவேளை, ஆண்டின் அதிசிறந்த மகளிர் வீராங்கனைக்கான விருதை அமெரிக்காவின் மேகன் ராபினோ வென்றார்.

நடப்பு ஆண்டில் பிரான்ஸில் நடைபெற்ற மகளிருக்கான உலகக்கிண்ண தொடரில், அதிக கோல்களை அடித்து, அமெரிக்கா அணி நான்காவது முறையாக உலகக்கிண்ணத்தை ஏந்துவதற்கு மேகன் ராபினோ முக்கிய காரணமாக திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண தொடரில், தங்கப் பந்து விருதையும், தங்க பாதணி விருதினையும் மேகன் ராபினோ வென்றிருந்தார்.

இங்கிலாந்து கழகமட்ட போட்டிகளில் லிவர்பூல் அணி பல வெற்றிக்கிண்ணங்களை வெற்றிக்கொள்வதற்



கும், இவ்வருடத்தில் தரவரிசையில் மூன்றாமிடத்தில் நீடிப்பதற்கும் வழிசமைத்த ஜீர்கன் க்ளோப் ஆண்டின் அதிசிறந்த பயிற்றுநருக்காக விருதை வெற்றி கொண்டார்.

லிவர்பூல் கழக அணியின் அலிசன் பெக்கர் ஆண்டின் அதிசிறந்த கோல் காப்பாளராகத் தெரிவானார்.

இவ்வருட போட்டிகளில் அதிசிறந்த கோலை போட்டவருக்கு பரிசளிக்கப்படும் புஸ்காஸ் விருது ஹங்கேரி அணியின் 18 வயதான டேனியல் ஸோரிக்கு வழங்கப்பட்டது.

உதைபந்தாட்ட நியதிகளை மதித்து, உதைபந்தாட்டத்தின் மகத்துவத்தை பேணி பாதுகாத்தமைக்கான விருது, ஆர்ஜென்ரீனாவின் முன்னாள் வீரரும் தற்போதைய முகாமையாளருமான மார்செலோ பீல்சாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச உதைபந்தாட்ட வீரர்கள், பயிற்றுநர்கள் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அதிகாரிகள் என பலரும் இந்த விருது வழங்கல் விழாவில் பங்கேற்றிருந்தனர்.

32 வயதான லியோனல் மெஸ்ஸி, ஆர்ஜென்ரீனா மற்றும் பார்சிலோனா அணிக்காக அதிக கோல் அடித்த வீரராகவும் விளங்குகின்றார். ஆனாலும் ‘உலகக்கிண்ணம்’ என்னும் அந்த உயரிய கிண்ணம் இவரது மனதில் நீங்காத ஒரு சோகமாய், ஆறாத ஒரு வடுவாய் இருந்து கொண்டு தான் இருக்கிறது.

எத்தனையோ கிண்ணங்களை அள்ளிக்குவித்த மெஸ்ஸியின் கைகள் தொட்டிராத ஒரே கிண்ணமாக உலகக்கிண்ணம் மாத்திரமே காணப்படுகிறது.

# சட்டத்துக்கு மேலான அதிகாரம் புத்த பிக்குகளுக்குக் கிடையாது

## வடக்கு அவைத் தலைவர் சிவஞானம் காட்டம்



யாழ்ப்பாணம், செப். 25

நாம் அறிந்தவரை பிக்குகளுக்குச் சட்டத்துக்கு மேலான அதிகாரமோ, முன்னுரிமையோ இல்லை என்பதை நாம் வலியுறுத்த விரும்புகின்றோம். மதத் தலைவர்களை மதிக்கும் பண்பு கொண்டவர்கள் தமிழர்கள். அதை வைத்துக் கொண்டு தமிழர்களுக்கு மேலாகத் தாங்கள் தான் மேம்பட்டவர்கள், மேலானவர்கள் என்று எவரும் கூறிவிட முடியாது.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண அவைத் தலைவரும் வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களின் அமையத்தின் இணைப்பாளருமான சி.வி. கே. சிவஞானம்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு நீராவியடிப்பிள்ளையார் ஆலய வளாகத்துக்குட்பட்ட பகுதியில் நீதிமன்ற உத்தரவையும் மீறி அடாத்தாக கொலம்பே மேதாலங்கார தேரரின் உடல் தகனம் செய்யப்பட்டமையும், அந்த சந்தர்ப்பத்தில் புத்த பிக்குகள் நடந்து கொண்ட அடாவடித்தனச் செயற்பாட்டையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மரணித்த மேதாலங்கார தேரர் நீராவியடிப்பிள்ளையார் கோவில் ஆலயப் பகுதியில் அடாத்தாக விகாரை ஒன்றை அமைத்து அமைதிக்குப் பங்கமாகச் செயற்பட்டவர். இந்த இடத்தில் விகாரை இருந்தது என்ற கூற்றை இனவாத தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரே மறுதலித்துள்ளார்.

மரணித்த ஒருவரின் உடலை அமைதியாகத் தகனம் செய்வதே மானிட தர்மம். ஆனால் அங்கு வந்த பிக்குகளோ அதனை வைத்து சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை வன்முறை மூலமாக நிலைநிறுத்த முயன்றுள்ளனர்.

நீதிமன்ற அவமதிப்புக்காகச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அத்தே கலகொட ஞானசார தேரரும் நேற்று முன்தினம் வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் பிரசன்னமாயிருந்தபொழுதே நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அப்படியிருந்தும் அவர் இந்த அடாத்தான உடல் தகனத்தில் முன்னின்று கலந்து கொண்டுள்ளார். இந்தமுறையும் அவர் நீதிமன்றத்தை அவமதித்தே உள்ளார். சட்ட நியாயப்படி இவருக்கெதிராக மீண்டுமொரு நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்படுவதே முறையான சட்ட ஒழுங்கு பராமரிப்பு செயற்பாடாகும்.

ஆனால் இந்த நாட்டு நீதித்துறை இவ்வாறு செயற்படாது என்ற துணிச்சலிலே தான் அவரும் அவருடன் சேர்ந்து இயங்கும் பிக்குகளும் சட்டத்தை தமது கைகளில் எடுத்துக்கொண்டு செயற்படுகின்றனர்.

இந்த வழக்கில் ஆஜரான சட்டத்தரணிகள் எவரும் பணத்துக்காக வழக்காடவில்லை. அவர்கள் நீதிக்காக வாதாடியவர்கள். அவ்வாறு வாதாடிய சட்டத்தரணியைப் பார்த்து இந்த நாட்டில் பிக்குகளுக்குத்தான் முன்னுரிமை என்பது உனக்குத் தெரியாதா? என்று இறுமாப்புடன் ஒரு பிக்கு கேட்கிறார். அவரையும் ஏனையோரையும் தாக்கியுமுள்ளனர். பிக்குகளை எவரும் எச் சந்தர்ப்பத்திலும் அவமதிக்கவில்லை.

நாம் அறிந்தவரையில் பிக்குகளுக்குச் சட்டத்திற்கு மேலான அதிகாரமோ, முன்னுரிமையோ இல்லை என்பதை நாம் வலியுறுத்த விரும்புகின்றோம். மதத் தலைவர்களை மதிக்கும் பண்பு கொண்டவர்கள் தமிழர்கள். அதை வைத்துக் கொண்டு தமிழர்களுக்கு மேலாகத் தாங்கள் தான் மேம்பட்டவர்கள், மேலானவர்கள் என்று எவரும் கூறிவிட முடியாது.

நேற்று முன்தினம் அரங்கேற்றப்பட்ட அடாவடித்தனம் அப்பட்டமான சட்டமீறல் என்பதால் இது சம்பந்தமான காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என வலியுறுத்தி நிற்கின்றோம் – என்றுள்ளது. (ஐ)

## வவுனியா மாவட்ட செயலகத்தில் சிறுவர் திறன் விருத்தி செயலமர்வு






வவுனியா, செப். 25

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் திறன் விருத்திச் செயலமர்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலக மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலக சிறுவர், பெண்கள் பிரிவின் ஏற்பாட்டில் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது.

சர்வதேச சிறுவர் தினமானது இம்முறை பிள்ளைகளின் வெற்றிக்கான நட்பான நாடு என்னும் தொனிப் பொருளில் இடம்பெறவுள்ளது. அதன் ஒரு கட்டமாக மாணவர்களின் திறன்களை விருத்தி செய்யும் முகமாக இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது.

இதில் சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த கிறேட் மிசன் அமைப்பைச் சேர்ந்த சமூக பணியாளர்கள் வளவாளராகக் கலந்து கொண்டு தமது நாட்டின் திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் கருத்துரைகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், உதவிப் பிரதேச செயலாளர் கமலதாசன், சிங்கப்பூர் கிறேட் மிசன் சமூக பணியாளர்கள், வெண்கலச் செட்டிகுளம் பிரதேச செயலாளர் க.சிவகரன், மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜெயக்கெனடி, செட்டிகுளம் பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் இளஞ்சிங்கம், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், செட்டிகுளம் மகாவித்தியாலயம் மற்றும் அல் இக்பால் மகாவித்தியால மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ – 100)

## களுத்துறையில் மழையால் 141 குடும்பங்கள் பாதிப்பு

கொழும்பு, செப் . 25

சீரற்ற வானிலை தொடர்ந்து நிலவுவதால், களுத்துறை மாவட்டத்தில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட 141 குடும்பங்களைச் சேர்ந்த 500 க்கு அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனரென களுத்துறை மாவட்ட செயலாளர் யூ.டீ.சீ. ஜயலால் தெரிவித்தார்.

மத்துகம, புளத்சிங்ஹள, பாலிந்தநுவர, வலல்லாவிட்ட, பதுரலிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)



# பிரபல தோமஸ்குக் நிறுவனம் வங்குரோத்து; ஒரே நாளில் 21 ஆயிரம் பேர் வேலையிழப்பு




இங்கிலாந்தின் பழம்பெரும் தோமஸ்குக் நிறுவனம் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டதால் (திவாலானதால்) அதில் பணியாற்றிய 21 ஆயிரம் பேர் ஒரே நாளில் வேலையிழந்தனர். அந்த நிறுவனத்தை நம்பி சுற்றுலா சென்றிருந்த 6 லட்சம் சுற்றுலாப் பயணிகள் திவால் அறிவிப்பால் பரிதவித்துப் போயுள்ளனர்.

சர்வதேச அளவில் சுற்றுலா ஏற்பாடு செய்வதில் முக்கிய இடத்தில் உள்ள தோமஸ்குக் என்ற நிறுவனத்தில் 21 ஆயிரம் ஊழியர்கள் பணிபுரிந்து வந்தனர். 1841ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நிறுவனத்திற்குச் சொந்தமாக ஐரோப்பிய நாடுகள் உள்பட 16 நாடுகளில் உணவகங்கள், விடுதிகள் மற்றும் விமானங்கள் உள்ளன. ஓராண்டில் சராசரியாக ஒரு கோடியே 90 லட்சம் வாடிக்கையாளர்களை, விமானங்கள் மூலம் வெளிநாடுகளுக்குச் சுற்றுலா அழைத்துச் சென்ற பெருமையைப் பெற்றது தோமஸ் குக்.

இந்நிலையில் ரோயல் பாங்க் ஒவ் ஸ்காட்லாந்து உள்ளிட்ட பல வங்கிகளிடம் கடன் பெற்று மிகப்பெரிய அளவில் தனது நிறுவனத்தை விரிவுபடுத்தியது தோமஸ் குக். உடனடியாக கடனை திருப்பிச் செலுத்துமாறு வங்கிகள் வற்புறுத்தியதைத் அடுத்து ஏராளமான கடன் பிரச்சினையால் அந்நிறுவனம் தத்தளித்து வந்தது. கடன் சுமை 15 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கவே, நெருக்கடியும் அதிகரித்தது. கடன் கொடுத்த நிறுவனங்கள் நெருக்கடி கொடுக்கவே தனது பங்குதாரரான சீனாவின் Fosun நிறுவனத்தை தோமஸ் குக் நாடியது.

சுமார் 8 ஆயிரம் கோடி ரூபாய் நிதி உதவி அளிக்க அந்த நிறுவனமும் ஒப்புக் கொண்டது. ஆனால் கடைசி நேரத்தில் மேலும் ஆயிரத்து 700 கோடி ரூபாய் வழங்க வேண்டும் என கடன் கொடுத்த நிறுவனங்கள் வற்புறுத்தவே, வேறு வழியின்றி தவித்த தோமஸ் குக், திவால் என அறிவித்தது.

தோமஸ் குக் விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டதால் பல்வேறு நாடுகளுக்கு சுற்றுலா சென்ற 6 லட்சத்திற்கும் மேற்பட்டோர் தாயகம் திரும்புவது சிக்கலாகியுள்ளது. அது மட்டுமின்றி அதன் ஏராளமான நிர்வாக அலுவலகங்களும் மூடப்படுகின்றன.

இங்கிலாந்தில் மட்டும் 600 பயண ஏற்பாட்டு அலுவலகங்களைக் கொண்ட இந்த சுற்றுலா நிறுவனத்தில் மொத்தம் 21 ஆயிரம் பேர் பணியாற்றி வந்தனர். இவர்களின் நிலையும் தற்போது கேள்விக்குறியாகியுள்ளது. இதையடுத்து பல்வேறு நாடுகளில் சிக்கியுள்ள இங்கிலாந்தைச் சேர்ந்த சுற்றுலா பயணிகளை மீட்க அந்நாட்டு அரசு தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது.

# புரளியால் மூண்டது பெரும் கலவரம்; வாகனங்கள் பல எரிப்பு; 20 பேர் பலி!


இந்தோனேசியாவில் நடந்த பயங்கரம்

ஜகார்த்தா, செப்.25

இந்தோனேசிய நாட்டில் புரளியால் ஏற்பட்ட கலவரத்திற்கு 20 பேர் பலியாகி உள்ளனர்.

இந்தோனேசிய நாட்டின் பப்புவா மாகாணத்தில் வாமினா நகரில் உயர்நிலை பள்ளியொன்றில் வேறு நகரைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் பப்புவா நகரை சேர்ந்த மாணவரை கடந்த வாரம் குரங்கு என திட்டி விட்டார் என புரளி கிளம்பியது.

அதனைத் தொடர்ந்து ஆத்திரமடைந்த நூற்றுக்கணக் கானோர் தெருக்களில் இறங்கி வன்முறையில் ஈடுபட்டனர். அவர்கள் நடத்திய போராட்டத்தில் அரசு கட்டடங்கள், கடைகள் மற்றும் வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டன. கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டன.

இந்த கலவரத்தில் வாமினா நகரில் வீடுகள் அல்லது கடைகளில் தீப்பற்றி எரிந்ததில் சிக்கி பொது மக்களில் 16 பேர் பலியாகினர். வன்முறை சம்பவங்களைக் கட்டுப்படுத்த துப்பாக்கி சூடும் நடத்தப்பட்டது. இதேபோன்று ஜெயபுரா பகுதியில் நடந்த மற்றொரு போராட்டத்தில் ராணுவ வீரர் ஒருவர் மற்றும் 3 பேர் பலியாகி உள்ளனர். 70 பேர் காயமடைந்து உள்ளனர்.

இதுபற்றி பொலிஸார் நடத்திய விசாரணையில் மாணவருக்கு எதிராக இனவெறி சம்பவம் நடந்ததற்கான சான்று எதுவும் கண்டறியப்படவில்லை. மாணவர்களிடையே பொய்யான புரளிகள் பரவியுள்ளன. வன்முறையை ஏற்படுத்தவே உள்நோக்கத்துடன் பொய்யான தகவல் பரப்பப்பட்டு உள்ளது என நம்பப்படுகிறது என்று பொலிஸ் அதிகாரி ரோட்ஜா கூறியுள்ளார்.




# இங்கிலாந்து சரக்கு கப்பலை விடுவித்து விட்டது ஈரான்

டெஹ்ரான், செப்.25

தடையை மீறி சிரியாவுக்கு மசகு எண்ணெய் ஏற்றி சென்றதாக கூறி ஈரானின் சரக்கு கப்பலை கடந்த ஜூலை மாதம் 4 ஆம் திகதி ஜிப்ரால்டர் ஜலசந்தி அருகே இங்கிலாந்து கடற்படை கைப்பற்றியது.

பாரசீக வளைகுடாவில் ஹோர்முஷ் ஜலசந்திப் பகுதியில் சென்று கொண்டிருந்த இங்கிலாந்தின் ஸ்டெனா இம்பெரோ என்ற சரக்கு கப்பலை இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அதே மாதம் 19 ஆம் திகதி ஈரான் கடற்படை சிறைபிடித்தது.

இந்தச் சூழலில் கடந்த மாதம் 17 ஆம் திகதி ஈரானின் சரக்கு கப்பலை இங்கிலாந்து விடுவித்தது. இதையடுத்து, இங்கிலாந்தின் சரக்கு கப்பல் விரைவில் விடுவிக்கப்படும் என ஈரான் ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்த நிலையில் சிறைபிடிக்கப்பட்ட இங்கிலாந்து நாட்டு சரக்கு கப்பலை விடுவித்துவிட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது. இதுகுறித்து ஈரான் கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் சட்டவிதிகளை மீறியதால் 2 மாதங்களாக சிறைபிடிக்கப்பட்ட ஸ்டெனா இம்பெரோ கப்பல் 22 ஆம் திகதி விடுவிக்கப்பட்டது.

அந்த கப்பல் இன்னும் சில தினங்களில் சர்வதேச கடற்பகுதியை வந்தடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டிரம்ப் - இம்ரான் கான் சந்திப்பு

நியூயோர்க், செப்.25

இந்தியாவும், பாகிஸ்தானும் விரும்பினால் காஷ்மீர் பிரச்சினையில்தான் நடுவராகச் செயல்படத் தயார் என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. சபைக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர் மோடி அமெரிக்கா சென்றுள்ளார். அங்கு அந்நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்புடன் இணைந்து ஹூஸ்டன் நகரில் ஹவுடி மோடி நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

அப்போது பேசிய, மோடி, பயங்கரவாதத்திற்கு எதிராக டிரம்ப் கடுமையான முயற்சி எடுத்து வருகிறார் என பாராட்டினார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் அதிபர் டிரம்பை பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் சந்தித்துப் பேசினார். அப்போது காஷ்மீர் பிரச்சினை இருநாடுகளுக்கும் இடையே நீண்டகாலமாக நடந்து வருகிறது என்று கூறிய டிரம்ப், இரு நாடுகளும் விரும்பினால், அந்தப் பிரச்சினையை நல்ல நடுவராக இருந்து தன்னால் தீர்த்து வைக்க முடியும் என்று தெரிவித்தார். அப்போது பேசிய இம்ரான்கான், ஹவுடிமோடி நிகழ்ச்சியில் மோடியின் பேச்சு ஆக்ரோஷமானதாக இருந்ததாகக் குறிப் பிட்டார்.

முன்னதாக கடந்த டிசெம்பர் மாதம் இம்ரான்கானும், டிரம்பும் சந்தித்த பேசிய போது, அப்போதும் காஷ்மீர் விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்ய தயாராக இருக்கிறார் என டிரம்ப் கூறிய கருத்தை இந்தியா நிராகரித்தது குறிப்பிடத்தக்கது.



# பள்ளிக் கட்டடம் இடிந்து விழுந்து நைரோபியில் 7 குழந்தைகள் பலி



கென்யா தலைநகர் நைரோபியில் பள்ளிக் கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில் 7 குழந்தைகள் பலியாகினர். மேலும் 57 பேர் படுகாயமடைந் திருக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கென்யாட்டா தேசிய மருத்துவமனை வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், சுமார் 64 பள்ளிக் குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்துக்குள்ளான பள்ளியில் மீட்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

உலோக தகடுகள் மற்றும் இடிந்து விழுந்த கொங்கிரீட் தூண்கள், இடிபாடுகளை அப்புறப்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. கட்டடம் இடிந்து விழுந்ததற்கான காரணம் குறித்து விசாரணை முடுக்கி விடப்பட்டுள்ளது.

ஆனால் இதற்கு முன்பாகவே நைரோபியில் உரிய அனுமதியின்றி கட்டப்பட்டு, இடியும் நிலையிலிருந்த சுமார் 30 முதல் 40 ஆயிரம் கட்டடங்களுக்கு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

நைரோபியில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு கனமழையால் 6 மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 51 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

# நீராவியடியில் பிக்குகள் அட்டகாசம் இனப் படுகொலைக்கான அறிகுறி!

## விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 25

முல்லைத்தீவில் பௌத்த பிக்குகளால் அரங்கேற்றப்பட்டது இனப்படுகொலைக்கான அறிகுறியாகும் என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவில் நடைபெற்ற மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் அவர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக் கேணிக்கு அருகில், நீதிமன்ற உத்தரவையும் புறந்தள்ளி பௌத்த பிக்கு ஒருவரின் உடல் கடந்த திங்கட்கிழமை தகனம் செய்யப்பட்டமை, பஸ்களில் கொண்டுவரப்பட்ட சிங்களக் காடையர்களினால் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் முன்னிலையில் சட்டத்தரணிகள் மற்றும் பொதுமக்கள் தாக்கப்பட்டமை ஆகியன எதிர்காலத்தில் வடக்கு – கிழக்கில் மீண்டும் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறக்கூடிய இனப்படுகொலைக்கான ஓர் அறிகுறி என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும்.

முல்லைத்தீவு – பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை ஆக்கிரமித்து விகாரை அமைத்துத் தங்கியிருந்த கொலம்ப மேதாலங்க தேரரின் இறுதி நிகழ்வுகள் ஏற்கனவே பெரும் பதற்றத்தை இந்தப் பகுதியில் ஏற்படுத்தி இருந்த நிலையில், சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான போதிய கால அவகாசம் அரசுக்கு இருந்தது.

வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி நிலமையை விவரித்து சட்ட ஒழுங்குகளுக்குப் பங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுமாறு கேட்டிருந்தேன்.

ஆனாலும் ஒரு அரசியல் கட்சி பஸ்களில் நாலாபுறத்தில் இருந்தும் சிங்களக் காடையர்களைக் கொண்டுவந்து அட்டூழியத்தில் ஈடுபடுவதற்கும் தனது நூற்றுக்கணக்கான படையினர் பார்த்துக்கொண்டு எந்த நடவடிக்கைகளையும் எடுக்காமல் வேடிக்கை பார்ப்பதற்கும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்ட ஒழுங்கைக் காப்பாற்ற உரிய நடவடிக்கைகளை எடுக்காமல் இருப்பதற்கும் அரசு அனுமதித்தமை வெறும் தற்செயலான ஒரு நிகழ்வு அல்ல.

இவை யாவும் மேலிட அனுசரணைகளுடன் தான் நடைபெற்றுள்ளன.

இலங்கை ஒரு தோல்வி அடைந்த நாடு என்பதையும், தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக அதிகரித்துவரும் 'இனக் குரோதம்' காரணமாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எந்த இனப்படுகொலை சம்பவங்களையும் தடுத்து நிறுத்தக்கூடிய நிலையில் இலங்கையின் அரசோ அல்லது அதன் பாதுகாப்பு நிர்வாகக் கட்டமைப்புக்களோ இல்லை என்பதையும் ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச சமூகம் புரிந்துகொண்டு உடனடியான தலையீடு ஒன்றை மேற்கொள்ளவேண்டும்.

தமிழ் மக்கள் தமது வடக்கு – கிழக்கு தாயகத்தில் சுய நிர்ணய உரிமைகளுடன் வாழ்வதற்கான ஏற்பாடு ஒன்றை இந்தியா மற்றும் சர்வதேச சமூகம் காலதாமதம் இன்றிச் செய்வதற்கான தருணம் வந்துவிட்டது என்பதை நேற்று முன் தினம் முல்லைத்தீவில் நடைபெற்ற நிகழ்வு எடுத்துக் காட்டுகின்றது.

கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்து என்ன பலன்? இதனை முன்னர் இலங்கையில் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஐ..நா. இணைத்தலைமை நாடுகள், இந்தியா மற்றும் ஏனைய நாடுகளுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேவேளை, முல்லைத்தீவில் நேற்று முன் தினம் நடைபெற்ற சம்பவம் ஒட்டுமொத்த தமிழ் மக்கள் மத்தியிலும் ஆறாத காயம் ஒன்றை ஏற்படுத்திவிட்டது. நேற்று முன் தினம் நடைபெற்ற சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன்பாக நிறுத்தப்படவேண்டும். இல்லையென்றால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தகுந்த பாடம் ஒன்றை வழங்குவதற்கு தமிழ் மக்கள் தருணம் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

அரசமைப்பில் பௌத்தத்திற்கு முதலிடம் கொடுத்தமை பிழையென்று 1978ஆம் ஆண்டு அரசமைப்பு தயாரிக்கப்படும்போது சட்டத்தரணியாகவும் அண்மையில் வடமாகாண முதலமைச்சர் என்ற முறையில் புதிய அரசமைப்பு தயாரிக்கப்படும்போதுஞ் சுட்டிக் காட்டியிருந்தேன்.

சிறு விடயங்களைப் பொருட்படுத்தத் தேவையில்லை என்று மெத்தப்படித்தவர்கள் சிலர் சீறினார்கள். நேற்று முன் தினம் ஒரு புத்த பிக்கு இந் நாட்டில் பௌத்தத்திற்கே முதலிடம், நீதிமன்றங்களுக்கு அல்ல என்று தனது வியாக்கியானத்தைத் தந்துள்ளார்.

இவ்வாறான ஏற்பாடுகள் எவ்வாறான எண்ணங்களை எமது பாமர மக்களின் மனங்களில் ஏற்படுத்துகின்றன என்பதை எம்மவர் புரிந்து கொள்ள வேண்டும்.

முல்லைத்தீவில் நேற்று முன் தினம் நடைபெற்ற அட்டூழியத்துக்கு எதிராக மிகவும் குறுகிய கால அவகாசத்தில் மக்கள் போராட்டம் ஒன்றை வெற்றிகரமாக ஒழுங்குசெய்த தமிழர் மரபுரிமை பேரவைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சட்டத்தரணிகளை ஒன்று சேர்த்து நீதிமன்றின் முன் பதாகைகளைப் பிடித்துக் கொண்டு தமது எண்ணங்களை வெளிப்படுத்திய சட்டத்தரணிகளுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக – என்றுள்ளது. (ஐ)

# பால்மா விலை நள்ளிரவு உயர்வு

கொழும்பு, செப். 25

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டதாகப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் 400 கிராம் பால்மா பைக்கெற்றின் விலை 20 ரூபாவாலும் ஒரு கிலோ கிராம் பால்மா பைக்கெற்றின் விலை 50 ரூபாவாலும் அதிகரிக்கப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்படும் பால்மா விலையை அதிகரிப்பதற்கு அமைச்சரவையின் உப குழு கடந்த வாரம் ஒப்புதல் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### தென் கொரியாவில் புயல் தாக்கி

# வீடுகள் சேதம்; போக்குவரத்துத்தடை 250 விமான சேவைகளும் ரத்தாகின



தென் கொரியாவின் பல்வேறு பகுதிகளில் கடும் புயல் தாக்கியதையடுத்து, சுமார் 250 விமானங்களின் பயண சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது.

தென் கொரியாவின் பல்வேறு பகுதிகளில் கடந்த இரு நாள்களாக கடுமையான புயல் புரட்டி எடுத்து வருகிறது.

இதனால் அங்குள்ள ஏராளமான வீடுகள் சேதமடைந்துள்ள நிலையில், சாலைகளில் நீர் பெருக்கெடுத்து ஓடி தரைவழி போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

புயல் தாக்குதலில் சிக்கியவர்களில் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார் என்றும் சுமார் 26 பேர் லேசான காயம் அடைந்துள்ளார்கள் என்றும் தென் கொரிய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே முன் எச்சரிக்கை நடவடிக்கையாக பல்வேறு பகுதிகளில் வான் வழி போக்குவரத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் 11 விமான நிலையங்களில், சுமார் 250 விமானங்களின் பயண சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

# அல்கொய்தாவினருக்கு பாக். பயிற்சி ஒப்புக் கொள்கிறார் இம்ரான் கான்

அல்கொய்தா மற்றும் பிற தீவிரவாத குழுக்களுக்கு பாகிஸ்தான் பயிற்சி அளித்ததாக முதல்முறையாக அந்நாட்டின் பிரதமர் இம்ரான் கான் ஒப்புக் கொண்டுள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வெளிநாட்டு உறவுகளுக்கான கவுன்சில் எனும் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் இம்ரான் கான் பேசினார்.

அப்போது அவர், இரட்டை கோபுர தகர்ப்புக்கு பிறகு, அமெரிக்கா வுடன் கைகோர்த்தது பாகிஸ்தான் செய்த மிகப்பெரிய தவறுகளில் ஒன்று என்றார்.

அமெரிக்காவுடன் கைகோர்த்ததால் பாகிஸ்தானியர்கள் 70 ஆயிரம் பேர் உயிரிழந்து விட்டனர் என்று இம்ரான் கான் குறிப்பிட்டார். இந்த சூழ்நிலையில், ஆப்கனில் அமெரிக்கா வெற்றி பெறாதற்கு பாகிஸ்தான் மீது குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுவதாக இம்ரான் கான் குறிப்பிட்டார்.

ஆப்கனில் சோவியத் யூனியன் படைக்கு எதிராக சண்டையிட 1980ம் ஆண்டுகளில் பயிற்சி அளிக்கப்பட்ட குழுக்கள், பிறகு அமெரிக்காவால் தீவிரவாத குழுக்களாக முத்திரை குத்தப்பட்டு விட்டன என அவர் கூறினார்.

ஆப்கனில் சண்டையிட அல்கொய்தா மற்றும் பிற குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு பாகிஸ்தான் ராணுவமும், ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பும் பயிற்சி அளித்தன என்றும், ஆதலால் அவர்களிடையே தொடர்பு நிலவுகிறது என்றும் இம்ரான் கான் தெரிவித்தார்.

பாகிஸ்தானால் பயிற்சி அளிக்கப்பட்ட தீவிரவாதிகளுக்கு எதிராக வே நடவடிக்கை எடுக்கப்படுவதில், பாகிஸ்தானைச் சேர்ந்த அனைவருக்கும் உடன்பாடு கிடையாது என்றும், அதுதான் பாகிஸ் தானில் தீவிரவாத தாக்குதல்கள் நடப்பதற்குக் காரணம் என்றும் இம்ரான் கான் குறிப்பிட்டார்.



# நோபல் பரிசு எனக்கு இல்லையே! வேதனையுடன் கூறுகிறார் டிரம்ப்

நோபல் பரிசு தமக்கு இன்னும் வழங்கப்படாமல் இருப்பது நியாயமற்றது என அமெரிக்க அதிபர் டிரம்ப் குறைபட்டுக் கொண்டுள்ளார்.

நியூயோர்க் நகரில் அவரும், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர். இந்தியா ஆக்கிரமிப்பாளர் போலவும், பாகிஸ்தான் அமைதி விரும்பி என்று பொருள்படும் வகையிலும் நீண்ட முன்னுரையுடன் கேள்வி எழுப்பிய பாகிஸ்தான் செய்தியாளர் ஒருவரை, தமது பதில் மூலம் அதிபர் டிரம்ப் வாயடைக்கச் செய்தார்.

நீங்கள் நினைத்ததை எல்லாம் பேசுகிறீர்கள் என்றும், நீங்கள் கேட்டது கேள்வி அல்ல, நீண்ட அறிக்கை என்றும் அந்த செய்தியாளரை விளாசிய டிரம்ப், இதுபோன்ற செய்தியாளர்களை எங்கு பிடிக்கிறீர்கள் என இம்ரான்கானை நோக்கி கிண்டலாகக் கேட்டார்.

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட்டால், டிரம்ப் நோபல் பரிசு பெற தகுதியானவர் என மற்றொரு செய்தியாளர் கூறியபோது, நியாயமாக நோபல் பரிசு வழங்கப்பட்டால், தாம் பல விடயங்களில் அதற்கு தகுதியானவர் என டிரம்ப் வருத்தத்துடன் கூறினார். ஆனால் அப்படி நியாயமாக நோபல் பரிசு வழங்கப்படுவதில்லை என்றும் அவர் விமர்சித்தார்.

அதனால்தான் ஒபாமாவுக்கு நோபல் பரிசு கொடுத்துவிட்டனர் என்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் குறைபட்டுக் கொண்டார். அதிபராகப் பொறுப்பேற்றவுடன் ஒபாமாவுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது எனவும், தனக்கு எதற்காக நோபல் பரிசு வழங்குகிறார்கள் என்றே அவருக்கு தெரியவில்லை என்றும் அதிபர் டிரம்ப் கூறினார். எதற்காக நோபல் பரிசு என்றே தெரியாத இந்த ஒரு விடயத்தில் மட்டும் ஒபாமாவுடன் தாம் உடன்படுகிறார் என்றும் டிரம்ப் குறிப்பிட்டார்.

# காவிகளின் அடாவடிக்கு எதிராக நேற்று முல்லைத்தீவில் கிளர்ந்தெழுந்த மக்கள்!




















# காவிகளின் அடாவடிக்கு எதிராக நேற்று முல்லைத்தீவில் கிளர்ந்தெழுந்த மக்கள்!




















# மன்னாரிலும் சட்டத்தரணிகள் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம்

மன்னார், செப். 25

முல்லைத்தீவு – செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரத்தில், சட்டத்தரணி தாக்கப்பட்டமையைக் கண்டித்து மன்னார் நீதிமன்ற வளாகத்தின் முன்னால் நேற்றுச் சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகளில் நேற்றுத் தடங்கல் ஏற்பட்டது. (ஐ)







# விடுதலைப் புலிகளுக்கு அரசு நிவாரணம் கொடுக்கின்றதாம்

## சரத் வீரசேகரவின் குற்றச்சாட்டு இது

கொழும்பு, செப். 25

அரசால் அமைக்கப்பட்ட காணாமல்போனோர் அலுவலகம் காணாமல் போனோர் தொடர்பாக கண்டறிவதற்குப் பதிலாக விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கே நிவாரணம் வழங்கிவருகிறது எனரியர் அட்மிரல் சரத் வீரசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றி பெறச் செய்வதற்கு அனைத்து இராணுவத்தினர் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் ஆதரவைப்பெற்றுக்கொள்ளும் நோக்கில் முக்கிய நிகழ்வொன்று இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு தொடர்பாக விளக்கமளிக்கும் போதே இராணுவத்தினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஜெனீவா கூட்டத்தொடரின்போது இராணுவத்தினர் குற்றத்தைச் செய்தனர் என ஏற்றுக்கொண்டு, அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அரசு இணை அனுசரணை வழங்கியது.

இணை அனுசரணை வழங்கியதன் ஊடாக அரசு இராணுவத்தினரை சர்வதேசத்தின் மத்தியில் காட்டிக் கொடுத்தது. அதன் காரணமாக இராணுவத்தினரில் பலருக்கு வெளிநாடு செல்வதற்கான விஸா அனுமதி மறுக்கப்பட்டது.

அதேபோன்று அரசால் அமைக்கப்பட்ட காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் காணாமல்போனோர் தொடர்பாகக் கண்டறிவதற்குப் பதிலாக, விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த போராளிகளுக்கு நிவாரணக் கொடுப்பனவை வழங்கிக்கொண்டிருக்கிறது.



அதுவும் அக்கொடுப்பனவுகள் அனைத்தும் பொதுமக்களின் வரிப்பணத்தில் இருந்தே செலுத்தப்படுகின்றன – என்றார். (ஐ)

# கோட்டாவின் இரட்டைக் குடியுரிமை; விசாரணை நடத்த நீதிமன்று உத்தரவு!

கொழும்பு, செப். 25

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் இரட்டைக் குடியுரிமை தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் லங்கா ஜெயரத்ன குற்றவியல் புலனாய்வு துறைக்கு உத்தரவிட்டுள்ளார். அத்துடன், விசாரணையைத் திகதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்துள்ளார்.

கோட்டாபயவின் இரட்டைக் குடியுரிமை தொடர்பாக மனித உரிமை ஆர்வலர்கள் பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர மற்றும் எல்.ஏ.சி.உயன்கொட ஆகியோர் சி.ஐ.டிக்கு அளித்த முறைப்பாடு தொடர்பான வழக்கிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, அமெரிக்கக் குடிமகனாக இருந்தபோது, சுற்றுலா விஸாவில் இலங்கைக்கு வந்துள்ளார் எனவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார் எனவும் உயன்கொட சி.ஐ.டியிடம் புகார் அளித்திருந்தார்.

அத்துடன் இந்த வழக்கு விசாரணை தொடர்பாக விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் இரு தொலைக்காட்சி சனல்களில் விமர்சனம் செய்தனர் என சி.ஐ.டி. நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இரண்டு தொலைக்காட்சி நிலையங்களிலிருந்து காட்சிகளின் திருத்தப்படாத பதிப்பைப் பெற சி.ஐ.டிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

சாட்சியின் வாக்குமூலங்களைப் பதிவு செய்யவும், அதன் முன்னேற்றம் குறித்து நீதிமன்றத்தில் அறிக்கையிடவும் சி.ஐ.டிக்கு அவர் உத்தரவிட்டார்.

# இந்துக்களை ஏளனப்படுத்தும் செயலே நீராவியடிச் சம்பவம்

## அமைச்சர் இராதாகிருஷ்ணன் கண்டனம்



கொழும்பு, செப். 25

நீராவியடிச் சம்பவத்தின்போது சட்டத்தரணிகளுக்கே பாதுகாப்பற்ற சூழ் நிலையேற்பட்டுள்ளது. இது நீதித்துறைக்கு விடுக்கப்பட்ட சவாலா என்ற கேள்வியை எங்கள் மத்தியில் எழுப்புகின்றது. மதத் தலைவர்கள் மதம் சார்ந்தவர்களாக இருக்கவேண்டுமே தவிர மதம் பிடித்தவர்களாக இருக்கக்கூடாது. நீராவியடிச் சம்பவமானது இந்துக்களையும், சைவர்களையும் ஏளனப்படுத்தும் செயலாகும் என விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் கலாநிதி.வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு:

முல்லைத்தீவில் உயிரிழந்த விகாராதிபதி மேதாலங்கார தேரரின் உடலை நீதிமன்ற உத்தரவை மீறிப் புனிதமான ஓர் இடத்தில் தகனம் செய்தமையானது பௌத்த துறவிகளுக்குச் சர்வதேச ரீதியாக அவப்பெயரைக் கொண்டு வரும் ஒரு செயலாகும். இது மத நல்லிணக்கம் தொடர்பாக முன்னின்று செயல்படுகின்ற ஜனாதிபதிக்கு விடுக்கப்பட்ட பெரும் சவாலாகும்.

இந்தச் சம்பவத்தின் மூலமாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் உள்ள நல்லுறவில் பாதிப்பு ஏற்படலாம். ஏனெனில் அண்மையில் இந்து மதத்தை முன்னிறுத்தி முன்னெடுக்கப்படுகின்ற இந்திய ஜனநாயக ஆட்சியில் பிரதமர் மோடி பௌத்த மதப் பிராந்தியம் ஒன்றை ஏற்படுத்தி மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்துள்ளார். இவ்வாறான சம்பவங்கள் அண்மைய நாடுகளை மத ரீதியாக பாதிப்பிற்குட்படுத்தும் செயலாகும்.

நீராவியடிச் சம்பவத்தின்போது சட்டத்தரணிகளுக்கே பாதுகாப்பற்ற சூழ் நிலை ஏற்பட்டுள்ளது. இது நீதித்துறைக்கு விடுக்கப்பட்ட சவாலா என்ற கேள்வியை எங்கள் மத்தியில் எழுப்புகின்றது. எனவே இது தொடர்பாக உரிய தரப்பினர் உரிய நடவடிக்கைகளை எடுக்க முன்வர வேண்டும். இந்த விடயத்தில் எந்தவிதமான விட்டுக் கொடுப்பிற்கும் இடமில்லை – என்றார்.

# பிக்குகளின் அடாவடியைக் கண்டித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிக்கை

கொழும்பு, செப்.25

புத்த பிக்குவின் உடல் சைவக் கோவிலின் வளாகத்தில் எரியூட்டப்பட்டமை, சட்டத்தரணி சுகாஷ் மற்றும் பொது மக்கள் தாக்கப்பட்டமையை கடுமையாகக் கண்டித்திருக்கிறது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

இது குறித்து முன்னணி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது –

முல்லைத்தீவு மாவட்டம் நாயாற்றுப் பகுதியில் அமைந்துள்ள நீராவியடி பிள்ளையார் ஆலய வளவை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டிருந்த புத்த கோவிலின் பிக்கு உயிரிழந்த நிலையில் இவரது உடலை பிள்ளையார் ஆலய வளவினுள் தகனம் செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு எதிராக ஆலய நிர்வாகத்தினால் நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தடை உத்தரவு பெறப்பட்டிருந்தது. எனினும் நீதிமன்ற உத்தரவை மீறி ஆலயத்தின் தீர்த்தக் கேணிக்கு அருகில் பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டுள்ளது.

ஞானசாரதேரர் தலைமையிலான சிங்கள பௌத்த சமூகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த வேண்டிய பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு முன்னிலையில் நீதிமன்றின் உத்தரவை மீறி பிள்ளையார் ஆலய தீர்த்தக் கேணிப் பகுதியில் தகனம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களது செயலைத் தடுப்பதற்கு குறித்த பொலிஸ் அதிகாரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக நீதிமன்றத் தீர்ப்பை சுட்டிக்காட்டி தகனம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழ் மக்களை குறித்த பொலிஸ் அதிகாரியும், பொலிஸாரும் இணைந்து அச்சுறுத்தியமையுடன், பிக்குகளின் அடாவடித்தனமான செயற்பாட்டிற்கும் உறுதுணையாகச் செயற்பட்டிருந்தனர்.

நீதி மன்ற உத்தரவை மீறி பிக்குவின் உடலைத் தகனம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோதமான நடவடிக்கையை தடுத்து நிறுத்துவதற்கு அங்கு திரண்டிருந்த தமிழ் மக்களுடன் இணைந்து சட்டத்தரணிகள் முயன்றபோது சட்டத்தரணி சுகாஷ் உட்பட நான்கு பேர் பிக்குகளினால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

சைவசமயத்தவர்களின் புனிதத் தலங்களில் ஒன்றான நீராவியடி பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக் கேணியருகில் பிக்குவின் உடலம் எரிக்கப்பட்டமைக்கும், சட்டத்தரணி சுகாஷ் மற்றும் பொது மக்கள் மூவர் தாக்கப்பட்டமைக்கும் எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். என்றுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.09.2019 இல் வெளியிடப்பெற்றது.